தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பால் பொருள்கள் தயாரிக்க பயிற்சி

ரசகுல்லா, பாசந்தி போன்ற பால் பொருள்கள் தயாரிக்க சென்னை அண்ணா நகரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையத்தில் ஒருநாள் பயிற்சி முகாம் வரும் புதன்கிழமை நடைபெறுகிறது. காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி முகாமில் கோவா, சென்னா, பனீர் இவற்றிலிருந்து ரசகுல்லா, ரசமலாய், பாசந்தி, குலோப் ஜாமூன், ஐஸ்கிரீம் போன்ற உணவு வகைகள் தயாரிக்க பயிற்சி வழங்கப் படும். முகாமில் பயிற்சி குறித்த கையேடு, குறிப்பேடு, மதிய உணவு மற்றும் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் போன்றவை வழங்கப்படும். வீட்டிலிருப்போர், சிறுதொழில் தொடங்குவோர் மற்றும் ஆர்வமுள்ளவர்களுக்கு இந்தப் பயிற்சி பயனுள்ளதாக அமையும். இதில் கலந்துகொள்ள விரும்புவோர் 044-26263484 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு முன் பதிவு செய்து கொள்ளலாம்.

## பொதும்புவில் 73 பேருக்கு விலையில்லா ஆடுகள்

தமிழக முதல்வரின் சிறப்புத் திட்டத்தின் கீழ், பொதும்புவில் விலையில்லா வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த விழாவில், மாவட்ட ஆட்சியர் எல். சுப்பிரமணியன் தலைமை வகித்துப் பேசியது: வறுமையில் வாடும் ஏழை, எளிய பெண்கள், தங்களது வாழ்க்கையில் முன்னேறுவதற்காக விலையில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கப்படுகின்றன. பயனாளிகளுக்கு வழங்கப்படும் 4 ஆடுகளை, கால்நடைத் துறை அலுவலர்கள் உதவியுடன் சந்தைக்குச் சென்று, விரும்பும் ஆடுகளைத் தேர்வு செய்து வாங்கிக் கொள்ளலாம். ஆடுகள் வாங்குவதற்கான செலவு ரூ. 12,800. போக்குவரத்துச் செலவு ரூ. 2000 என மொத்தம் ரூ. 14,800 தொகையை அரசே ஏற்றுக் கொள்ளும். அத்துடன், ஆடுகளை பராமரிப்பதற்காக கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் இலவச மருத்துவச் சிகிச்சையும் அளிக்கப்படும் என்றார். விழாவில், 73 பயனாளிகளுக்கு ரூ. 10.80 லட்சம் மதிப்பிலான விலையில்லா ஆடுகளை வழங்கி, அமைச்சர் செல்லூர் கே. ராஜூ பேசியது: தமிழகத்திலுள்ள கிராமப்புற பெண்களின் வாழ்க்கைத் தரத்தை

உயர்த்தும் உன்னத நோக்கில், 5 ஆண்டுகளில் 7 லட்சம் பேருக்கு விலையில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை, 4 லட்சத்துக்கும் மேற்பட்ட ஏழை பெண்களுக்கு தலா 4 ஆடுகள் வீதம், 16 லட்சத்து 29 ஆயிரத்து 414 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதில், 15 லட்சத்து 58 ஆயிரத்து 291 ஆடுகள் குட்டிகளை ஈன்றுள்ளன. இவற்றின் மதிப்பு ரூ. 16.31 கோடியாகும். மதுரை மாவட்டத்தில், 12,718 கிராமப்புற பெண்களுக்கு ரூ. 16.31 கோடி மதிப்பில் வழங்கப்பட்ட 50,872 வெள்ளாடுகள், இதுவரை ஈன்றுள்ள குட்டிகளின் எண்ணிக்கை 50,893. இவற்றின் மதிப்பு ரூ.10.17 கோடியாகும். தற்போது, சினையாக உள்ள ஆடுகளின் எண்ணிக்கை 24,690 என்றார் அமைச்சர். விழாவில், தமிழக அரசின் புதுதில்லி சிறப்புப் பிரதிநிதி எஸ்.டி.கே. ஜக்கையன், மக்களவை உறுப்பினர் ஆர். கோபாலகிருஷ்ணன், எம்.எல்.ஏ.க்கள் ஆர். சுந்தர்ராஜன், வி. கருப்பையா, எம். முத்துராமலிங்கம், துணை மேயர் கு. திரவியம், மேற்கு ஒன்றியக் குழுத் தலைவர் பழனியமமாள், பொதும்பு ஊராட்சித் தலைவர் சி. ஜெயராமன் மற்றும் பலர் கலந்துகொண்டனர். முன்னதாக, கால்நடைத் துறை இணை இயக்குநர் ரா. கோபிநாத் வரவேற்றுப் பேசினார். துணை இயக்குநர் பி. ரவீந்திரன் நன்றி கூறினார்.

## மா மதிப்புக் கூட்டு உற்பத்தி நிலையம் அமைக்க கோரிக்கை

தேனி மாவட்டத்தில் மா விவசாயத்தை மேம்படுத்தும் வகையில், மா மதிப்புக் கூட்டு பொருள் உற்பத்தி நிலையம் அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தமிழகத்தில் சேலம் மாவட்டத்துக்கு அடுத்ததாக தேனி மாவட்டத்தில் அதிக அளவில் மா சாகுபடி நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் பெரியகுளம், போடி, வருசநாடு, கம்பம் ஆகிய பகுதிகளில் 10 ஆயிரத்து 430 ஹெக்டேர் பரப்பளவில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வறட்சி, இயற்கை சீற்றம், பூச்சி நோய் தாக்குதல் ஆகியவற்றால் உற்பத்திச் செலவு அதிகரித்தும், மகசூல் குறைந்தும் வருவதால் மா விவசாயத்தில் தொடர்ந்து நஷ்டத்தை சந்தித்து வருவதாக விவசாயிகள் கூறுகின்றனர். தற்போது நீலம் ரகத்தை அதிக அளவில் சாகுபடி செய்து வரும் மா விவசாயிகள், ஏற்றுமதி மற்றும் மாங்கூழ் தயாரிப்புக்கு ஏற்ற ரகங்களான அல்போன்சா, பெங்களூரா உள்ளிட்ட புதிய ரகங்களுக்கு செயல் விளக்கத் திடல் அமைக்கவும், மா மதிப்புக் கூட்டுப் பொருள் உற்பத்தி நிலையம் அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பண்ணைக் குட்டைகள் அமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு

தேனி மாவட்டத்தில் ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் விவசாய நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க விரும்பும் சிறு, குறு மற்றும் ஆதி

திராவிடர் சமுதாய விவசாயிகள் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்களை நேரில் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.இது குறித்து மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பு: விவசாய நிலங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயரவும், மழைநீரை சேமித்து கிணற்றில் நீர்செரிவு ஏற்படுத்தவும் பண்ணைக் குட்டைகள் அமைக்கப் படுகின்றன. தேனி மாவட்டத்தில் சிறு, குறு மற்றும் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த விவசாயிகளின் நிலங்களில், மகாத்மா தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் பண்ணைக் குட்டைகள் அமைத்துத் தர தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தங்களது நிலத்தில் பண்ணைக் குட்டை அமைக்க விரும்பும் விவசாயிகள், அந்தந்த பகுதியில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலரை நேரில் தொடர்பு கொண்டு பயனடையலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மரவள்ளி கிழங்கு விலை வீழ்ச்சி: விவசாயிகள் வேதனை

ஆண்டிபட்டி பகுதியில் மரவள்ளி கிழங்கு விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டி, தேவதானப்பட்டி மற்றும் குமணன்தொழு பகுதிகளில் ஏத்தக்கப்பை எனப்படும் மரவள்ளி கிழங்குகள் பயிரிடப்பட்டுள்ளன. இங்கு விளைவிக்கப்படும் கிழங்குகளை கேரள வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்து எடுத்துச்செல்வார்கள். மேலும் குமணன் தொழு பகுதியில் உள்ள சிப்ஸ் தொழிற்சாலையில் கிழங்குகளை பதப்படுத்தி கப்பை சிப்ஸ் தயாரிக்கப்பட்டு கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது. தற்போது தேனி மற்றும் திண்டுக்கல் பகுதியில் இருந்து மரவள்ளிக் கிழங்கு வரத்து அதிகரித்துள்ள நிலையில், கேரள வியாபாரிகள் வருகை இல்லாததால் தேனி, திண்டுக்கல் பகுதியிலேயே விற்பனை செய்யப்படுகிறது. உள்ளூர் வியாபாரிகள் கிழங்கை கொள்முதல் செய்து ரூ.15 முதல் 20 வரை விற்பனை செய்து வருகின்றனர். இதுகுறித்து விவசாயி மாரிச்சாமி கூறியது: மழை இல்லாத போதும், இருக்கும் தண்ணீரை வைத்து மரவள்ளி பயிரிட்டோம். ஆனால் தற்போது கிலோ ரூ.10க்கு மட்டுமே வியாபாரிகள் கொள்முதல் செய்வதால் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றார்.

## வன அலுவலகங்களை முற்றுகையிட தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் முடிவு

கூடலூர் மாவட்ட வன அலுவலர் அலுவலகத்தை தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் முற்றுகையிட்டு போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து சங்க மாவட்டத் தலைவர் என்.வாசு கூறியது:

ஆரோட்டுப் பாறை பாரதி நகரைச் சேர்ந்தவர் பசுபதி. கெல்லி எஸ்டேட் தொழிலாளியான இவரை வேலைக்கு செல்லும் வழியில் யானை தாக்கிக் கொன்றது. தற்போது ஓவேலி பகுதியில் காட்டு யானைகளின் ராஜ்யம்தான் நடக்கிறது. ஆரோட்டுப்பாறை, எல்லமலை, சீபுரம், சூண்டி, காமராஜ் நகர், தருமகிரி உள்ளிட்ட கிராமங்கள் யானைகளின் கூடாரமாக மாறிவிட்டது. பகல் நேரத்தில் கூட தொழிலாளர்கள் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. யானைகளின் அட்டகாசத்தை வனத் துறையினர் கட்டுப்படுத்தி காட்டுக்குள் விரட்டும் பணியில் ஈடுபடுவதில்லை. எல்லாப் பகுதியிலும் விவசாய பயிர்களை யானைகள் அழித்து வருகின்றன. இதனால பல லட்சம் ரூபாய் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. விவசாயிகளின் விளைபொருள்களுக்கு உரிய இழப்பீடு வழங்கக் கோரியும், யானை தாக்கி மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ.10 லட்சம் இழப்பீடு அளிக்க வலியுறுத்தியும் ஆக.4-ம் தேதி, பந்தலூர் வட்டத்திலுள்ள பிதிர்க்காடு வனச் சரக அலுவலகத்தையும், ஆக.5-ம் தேதி, கூடலூர் மாவட்ட வன அலுவலர் அலுவலகத்தையும் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்படும் என்றார்.

**ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 42 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பு**

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் அருவிக்கு ஞாயிற்றுக்கிழமை நீர்வரத்து 42 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. கர்நாடக மாநில நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கன மழையால் அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் உள்ளிட்ட அணைகள் நிரம்பி வழிகின்றன. இதனால், அணைகளில் இருந்து உபரி நீர் தமிழகத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. இந்தத் தண்ணீர், கடந்த 18-ஆம் தேதி தமிழக எல்லையில் உள்ள பிலிகுண்டுலு வழியாக ஒகேனக்கல் அருவியை வந்தடைந்தது. இந்த நிலையில், கடந்த 10 நாள்களாக ஒகேனக்கல்லுக்கு வரும் கூடுதல் தண்ணீரால் அருவியில் உள்ள பாறைகள் அனைத்தும் மூழ்கிய நிலையில் தண்ணீர் வெள்ளமென பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்நிலையில், சனிக்கிழமை அருவிக்கு வரும் நீர்வரத்து நொடிக்கு 39 ஆயிரம் கன அடியாக இருந்தது. இதைத் தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை சற்று அதிகரித்து நீர்வரத்து நொடிக்கு 42 ஆயிரம் கன அடியாக இருந்தது. இதனால், பாதுகாப்பு கருதி தொடர்ந்து 10-ஆவது நாளாக அருவியில் குளிக்கவும், பரிசல் ஒட்டவும் தடை விதிக்கப்பட்டது. மேலும், கரையோர கிராம மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு வேறு இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப் பட்டது. திருப்பி அனுப்பப்பட்ட சுற்றுலாப் பயணிகள்: ஒகேனக்கல் அருவிக்கு கடந்த 10 நாள்களாக கூடுதல் தண்ணீர் வருகிறது. இதனால், பாதுகாப்புக் கருதி பயணிகள் குளிக்க, பரிசலில் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், இதை அறியாத சுற்றுலாப் பயணிகள் சிலர் ஞாயிற்றுக்கிழமை வழக்கம் போல

அருவியில் குளிக்க வந்திருந்தினர். இவர்களை போலீஸார் தடுத்து திருப்பி அனுப்பினர். இதனால் பயணிகள் பெருத்த ஏமாற்றுத்துடன் திரும்பிச் சென்றனர்.

**அமராவதி ஆற்றிலுள்ள குடிநீர் உறிஞ்சு கிணறுகளைத் தூர்வார வேண்டும்**

கரூர் அமராவதி ஆற்றில் உள்ள குடிநீர் உறிஞ்சு கிணறுகளைத் தூர்வார வேண்டும் என கரூர் திருக்குறள் பேரவை வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக பேரவையின் தலைவர் மேலை பழனியப்பன் கூறுகையில், அமராவதி ஆற்றின் அணையில் இருந்து தற்போது வினாடிக்கு 2500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்தத் தண்ணீர் திங்கள்கிழமை கரூரை வந்தடையும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனிடையே ஆற்றில் தண்ணீர் வருவதை முன்னிட்டு ஆற்றுக்குள் உள்ள முட்புதர்களை அகற்றும் பணியில் நகராட்சி நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. இதே போல ஆற்றுக்குள் மூன்று வருடங்களுக்கு மேல் தண்ணீரின்றி வறண்டுக் கிடக்கும் குடிநீர் உறிஞ்சு கிணறுகள் அனைத்தும் தூர்ந்துபோயுள்ளன.அவற்றில் சில கிணறுகளில் பிளாஸ்டிக் பைகள், குடிநீர் பாட்டில்கள், பழைய துணிகள் என மாசடைந்து காணப்படுகிறது. எனவே அவற்றையெல்லாம் அகற்றி பொதுமக்களுக்கு சுகாதாரமான தண்ணீர் கிடைக்க நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

**அமராவதி ஆற்றில் சீரமைப்புப் பணி தீவிரம்**

அமராவதி ஆற்றில் திறக்கப்பட்டுள்ள தண்ணீர் திங்கள்கிழமை கரூரை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே ஆற்றில் உள்ள முட்புதர்களை அகற்றும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி அணை மூலம் கரூர் மாவட்டத்தில் உள்ள பழைய ஆயக்கட்டு பாசனப்பகுதிகள் சுமார் 5,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்நிலையில் கடந்த 3 ஆண்டுகளாக கரூர் மாவட்டத்திற்கு தண்ணீர் திறக்கப்படாததால் அமராவதி ஆறு வறண்டு காணப்பட்டது. ஆற்றின் நீர்மட்டம் குறைந்ததால் பாசனப்பகுதியில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளிலும் நீர்மட்டம் குறைந்தது. 1000 அடிக்கும் மேல் ஆழ்குழாய் அமைத்தும் விவசாயிகளுக்கு நீர் கிடைக்கவில்லை. விவசாயமும் அடியோடு பாதிக்கப்பட்டது. கால்நடைகளுக்குகூட தண்ணீர் கிடைக்காமல் போனது. இதனிடையே விவசாயிகள் கடந்த மாதம் அமராவதி ஆற்றில் தண்ணீர் திறக்கக் கோரி ஒத்தமாந்துறை என்ற இடத்தில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து அமராவதி வடிகால் கோட்ட அதிகாரிகள் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதின்பேரில் 23-ம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என உறுதியளித்தனர். இதையடுத்து அணையின் நீர்பிடிப்புப் பகுதியில் பலத்த மழை

பெய்ததைத் தொடர்ந்து அணையில் நீர்மட்டம் 58 அடியாக உயர்ந்தது. இதனால் அணையில் 1.3 டிஎம்சிக்கு மேல் தண்ணீர் இருந்ததால் விவசாயிகளிடம் கூறியவாறு அணையில் இருந்து விநாடிக்கு 2,500 கன அடி வீதம் தண்ணீர் கடந்த 23-ம் தேதி திறக்கப்பட்டது. தண்ணீர் திறந்து 5 நாட்களாகியும் தண்ணீர் கரூரை வந்து சேரவில்லை. இதனால் கடைமடை விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர்.

இதுதொடர்பாக அமராவதி கோட்டப் பொறியாளர் ஒருவர் கூறியது:

அணையில் போதியளவு தண்ணீர் இருப்பு உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் தண்ணீர் இல்லாததால்தான் கரூர் மாவட்டத்திற்கு போதியளவு தண்ணீர் திறக்கப்படவில்லை. மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் பலத்த மழை பெய்வதால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் நிகழாண்டில் தண்ணீர் கரூர் மாவட்டத்திற்கு போதிய தண்ணீர் கிடைக்கும். தற்போது திறக்கப்பட்ட தண்ணீர் அணையில் இருந்து 190 கி.மீ. தூரம் உள்ள செட்டிப்பாளையம் தடுப்பு அணைக்கு வந்துள்ளது. இந்த அணை நிரம்பிடும். திங்கள்கிழமை காலை கரூரைத் தொட்டுவிடும் என்றார். இதனிடையே ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டதையொட்டி நகராட்சி நிர்வாகம் சார்பில் ஆற்றில் உள்ள முட்புதர்களை பொக்லின் இயந்திரம் மூலம் அகற்றும் பணி ஞாயிற்றுக்கிழமை தீவிரமாக நடைபெற்றது.

## புதிய வேளாண் மின் இணைப்புகளை உடனே வழங்க வலியுறுத்தல்

புதிய வேளாண் மின் இணைப்புகளை தாமதமின்றி வழங்க வேண்டும் என மாவட்ட நுகர்வோர் குழு வலியுறுத்தியுள்ளது. புதுக்கோட்டையில் ஞாயிற்றுக்கிழமை மாவட்டத் துணைத் தலைவர் சு. தனவேலு தலைமையில் நடைபெற்ற மாவட்ட நுகர்வோர் குழு பொதுக் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் நகரப்பகுதிகளைப் போல அனைத்து ஊரகப் பகுதிகளுக்கும் கோதுமை, மண்ணெண்ணெய், பருப்பு வகைகளை நியாயவிலைக்கடைகள் மூலம் தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும். நிலத்தடி நீர் பெருக மழைநீர் சேகரிப்பை தமிழக அரசு வலியுறுத்திவரும் அதே வேளையில், நிலத்தடி நீரைச் சேமிக்கும் ஆதாரமான ஆற்று மணலை வரம்பு மீறி அள்ளுவதைக் கட்டுப்படுத்த வேண்டும். நாட்டில் அதிகளவில் கிடைக்கும் ஆதாரமான சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிப்பது சுற்றுச்சூழலுக்கும், நல்வாழ்வுக்கும் மிகவும் பாதுகாப்பானதாகும். எனவே, இம்மின்திறன் உற்பத்திக் கருவிகளை மானிய விலையில் வழங்கி மின்திறன் உற்பத்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்தில் வேளாண்மை பாதிக்கப்படும் நிலையைத் தவிர்க்கவும், நீர் தேவைப்படும் பகுதிகளுக்கு மிகை நீரைப் பயன்படுத்தவும் உருவாக்கப்பட்ட கொள்ளிட உபரிநீர் திட்டப் பணியை

நிறைவேற்ற வேண்டும்.புதுக்கோட்டையில் ஷேர் ஆட்டோக்களை இயக்க அனுமதி வழங்க வேண்டும். ஆட்டோக்களுக்கான வாடகையை நிர்ணயிக்க வேண்டும். புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியை விரைவில் தொடங்க வேண்டும். அறந்தாங்கி, புதுக்கோட்டை, மணப்பாறை ரயில் பாதையை அமைக்க வேண்டும். வருவாய் வட்டத் தலைநகரான கீரனூர், திருமயத்தில் விரைவு ரயில் வண்டிகள் நின்று செல்ல வேண்டும். அறந்தாங்கி ரயில் நிலையத்தில் செயல்படாமல் நிறுத்தி வைக்கப்பட்ட கணினி முன்பதிவு மையத்தை மீண்டும் செயல்படச்செய்ய வேண்டும். வேளாண்மைப் பணிகளுக்கான புதிய மின் இணைப்புகளை தாமதமின்றி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. செயலர் கோ.இரா. சோதி வரவேற்றார். பொதுச் செயலர் க. வேழவேந்தன்ஆண்டறிக்கை மற்றும் தீர்மானங்களை முன்மொழிந்தார். பொருளாளர் து. லதா உத்தமன் வரவு, செலவுக் கணக்குகளை வாசித்தார். நிர்வாகிகள் வீ. செல்லப்பன் ஆகியோர் பேசினர்.

## <u>எள் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி</u>

புதுக்கோட்டை மாவட்டம், குலமங்கலம் அருகே விவசாயிகளுக்கு ஆடிப்பட்ட எள் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண் கல்லூரி மாணவர்கள் வெள்ளிக்கிழமை பயிற்சி அளித்தனர். குலமங்கலம் அருகேயுள்ள பாண்டிக்குடி கிராமத்தில் வம்பன் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானி நூர்ஜகான் தலைமையில் இந்த வயல்வெளி பயிற்சி நடைபெற்றது. இதில், ஜூலை முதல் ஆகஸ்ட் வரையிலான ஆடிப்பட்டத்தில் 50% எண்ணெய்த்தன்மை கொண்ட எள் பயிரை சாகுபடி செய்து அதிக அளவில் மகசூல் பெறலாம். ஆடிப்பட்டத்தில் எள் பயிரிடுவதற்கு முன் நிலத்தை டிராக்டரில் ஆழ உழும் கலப்பையால் 2 அல்லது 3 முறை புழுதிபட உழுது, நிலத்தில் நீர் தேங்காத வகையில் சமமாகத் தயார் செய்ய வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழுஉரம் இடவேண்டும். ஆடிப்பட்டத்தில் எள் சாகுபடிக்கு கோ.1, டி.எம்.வி-3, டி.எம்.வி-7 போன்ற ரகங்கள் ஏற்றவை. தேர்வு செய்யப்பட்ட ரகங்களின் விதைகளை 1 கிலோவிற்கு 4 கிராம் டிரைகோடெர்மா அல்லது கார்பன்டெசிம் 2 கிராம் கொண்டு விதைநேர்த்தி செய்ய வேண்டும். விதையை 8 கிலோ மணலுடன் சோ6த்து சீராகத் தூவ வேண்டும். விதைத்த 15-வது நாளில் 15 செ.மீ இடைவெளி 30-வது நாளில் 30 செ.மீ இடைவெளி வைத்து செடிக்கு செடி கலைக்க வேண்டும். இதுதவிர விதைத்த 7 நாட்களுக்குள் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பூக்கும் பருவமான 35 முதல் 55 நாட்களில் சீரான அளவு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். களை நிர்வாகத்துக்கு ஆலாகுளார் மருந்தை ஏக்கருக்கு 500 மி.லி கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். இலைப்பூச்சி, எள் குடையான், கொண்டைப்புழு, கொசு மாதிரி காணப்படும் முடிச்சுப்புழு இருப்பின் ஏக்கருக்கு

500 மி.லி. கார்பாரில் தெளிக்கவும். அசுவினி நோய் காணப்பட்டால், 5 கிராம் இமிடாகுளோபிரிட் கொண்டு விதைநேர்த்தி செய்ய வேண்டும். தத்துப்பூச்சி மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளுக்கு ஏக்கருக்கு குயினால்பாஸ் 600 மி.லி, மெத்தில் டெமடான் 300 மி.லி தெளிக்கலாம். வேர் அழுகல் நோய் இருப்பின் கார்பன்டெசின் கொண்டு கட்டுப்படுத்தலாம். இலைப்புள்ளி, வாடல் நோய் இருப்பின் மான்கோசெப் கொண்டு சரிசெய்யலாம். சாம்பல் நோய் தாக்கியிருந்தால், ஏக்கருக்கு 10 கிலோ சல்பா மருந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். விவசாயிகள் நவீன தொழில்நுட்ப முறைகளை கையாள்வதன் மூலம் எள் பயிரில் சராசரியாக ஆடிப்பட்டத்தில் ஏக்கருக்கு 1200 முதல் 1500 கிலோ வரை மகசூல் பெறமுடியும் என பயிற்சியில் தெரிவிக்கப்பட்டது.

## நெல்லை மாவட்டத்தில் சூரியஒளியில் நுண்நீர் பாசனம் செய்யும் முறை அறிமுகம்

திருநெல்வேலி மாவட்டத்தில் முதன் முறையாக சூரியஒளியில் மின்மோட்டார்களை இயக்கி நுண்நீர் பாசன முறையில் வேளாண், தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்யும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் தெரிவித்தார். இதுகுறித்து மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் எஸ். ராஜாமுகம்மது வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்மாவட்டங்களில் முதன்முறையாக திருநெல்வேலி மாவட்டத்தில் சூரியஒளி திசைக்கேற்ப இயக்கப்படும் அமைப்பைக் கொண்டு சூரியஒளி சக்தி மூலமாக 5 குதிரைத் திறன் கொண்ட மின்மோட்டாரை இயக்கி நுண்நீர் பாசன முறையில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மின்சாரம் தடையின்றி தொடர்ந்து காலை 8.30முதல் மாலை 6.30 மணிவரை பயிர்களுக்கு நீர் பாய்ச்ச முடியும். இத்திட்டத்தில் அரசு 80 சதவீதம் மானியம் வழங்குகிறது. மண்வள மேம்பாடு, சிக்கன முறையில் நீரைப் பயன்படுத்தும் தேசிய நுண்நீர் பாசனத் திட்டம், துல்லிய பண்ணையத் திட்டம், பண்ணை இயந்திரமயமாக்குதல், பாதுகாக்கப்பட்ட சூழலில் சாகுபடி போன்ற உயர் தொழில்நுட்ப உத்திகளைக் கொண்டு உற்பத்தி இடைவெளியைக் குறைத்து வேளாண் உற்பத்தியை இரு மடங்கு பெருக்கவும், விவசாயிகள் வருமானத்தை 3 மடங்கு உயர்த்தும் வகையிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சூரியஒளி சக்தி மூலமாக 4,800 வாட்ஸ் பவர் மின்சாரத்தை உற்பத்தி செய்து 5 குதிரைத் திறன் சக்தி கொண்ட மின்மோட்டாரை இயக்கி நாள் ஒன்றுக்கு 90 ஆயிரம் லிட்டர் நீரினை பம்ப் செய்ய முடியும். திறந்தவெளி கிணறு, ஆழ்குழாய் கிணறு, தரைமட்ட நீர்த் தொட்டி போன்ற நீர்ப்பாசன ஆதாரங்களைக் கொண்டு இத்திட்டத்தை செயல்படுத்தலாம்.

ஆழ்குழாய் கிணறு பாசன ஆதாரத்தின் கட்டமைப்புகளை இணைக்க ரூ. 4 லட்சத்து 39 ஆயிரத்து 950 செலவாகும். இதில் ரூ. 3 லட்சத்து 35 ஆயிரத்து 200 மானியமாக வழங்கப்படும். விவசாயிகள் பங்காக ரூ. 1 லட்சத்து 4 ஆயிரத்து 750 செலுத்த வேண்டும். இதேபோல் திறந்தவெளி கிணறு பாசன ஆதாரத்தில் ரூ. 5 லட்சத்து ஆயிரத்து 512 செலவாகும். இதில் மானியமாக ரூ. 3 லட்சத்து 84 ஆயிரம் வழங்கப்படும். விவசாயிகள் பங்காக ரூ. 1 லட்சத்து 17 ஆயிரத்து 512 செலுத்த வேண்டும். தரைமட்ட நீர்பாசன அமைப்புக்கு ரூ. 5 லட்சத்து 24 ஆயிரத்து 650 செலவு ஆகும். இதில் மானியமாக ரூ. 3 லட்சத்து 99 ஆயிரத்து 872 வழங்கப்படும். விவசாயிகள் பங்காக ரூ. 1 லட்சத்து 24 ஆயிரத்து 778 செலுத்தவேண்டும். இத்திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் 45 பயனாளிகளைத் தேர்வு செய்து செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் கடையம் ஒன்றியம் ஐந்தாங்கட்டளை, மானூர் வட்டாரம் கரடிகுளம் உள்ளிட்ட ஊர்களில் 35 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது என்றார் அவர்.

## கரும்பு கொள்முதல் சட்டத் திருத்தம்: பாஜக எதிர்ப்பு

கர்நாடக கரும்பு (கொள்முதல், வழங்கல் ஒழுங்குமுறை) சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற எதிர்ப்புத் தெரிவித்து, மேலவையிலிருந்து பாஜக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். கர்நாடக சட்ட மேலவையில் சனிக்கிழமை மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர் மகாதேவ பிரசாத், கர்நாடக கரும்பு (கொள்முதல், வழங்கல் ஒழுங்குமுறை) சட்ட முன்வடிவு-2014-ஐ தாக்கல் செய்தார். அதன் மீதான விவாதத்தில் பங்கேற்று எதிர்க்கட்சித் தலைவர் கே.எஸ்.ஈஸ்வரப்பா பேசியது: இந்தச் சட்டத் திருத்தத்தை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். இது சர்க்கரை ஆலைகளின் நலனுக்காக கொண்டு வரப்பட்டுள்ள கருப்புச் சட்டம்; விவசாயிகளின் நலனுக்கு எதிராக உள்ளது என்றார் அவர். மதச்சார்பற்ற ஜனதா தள சட்ட மேலவைக் கட்சித் தலைவர் பசவராஜ் ஹோரட்டி, மஜதவின் மரிதிப்பே கெüடா, பாஜகவின் விஜயசங்கர், காங்கிரஸ் கட்சியின் வி.எஸ்.உக்ரப்பா ஆகியோர் இந்த விவாதத்தில் பேசினார். விவாதத்திற்குப் பதிலளித்து அமைச்சர் மகாதேவ பிரசாத் கூறியது: கரும்பு விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதற்காகவே இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. கரும்பு கொடுத்த 14 நாள்களுக்குள் அதற்குரிய பணத்தை விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் தராவிட்டால், வட்டியும், முதலுமாக கொடுக்க நேரிடும். விவசாயி களின் நலன் காக்கும் இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்றார் அவர். இந்தச் சட்டத் திருத்தத்தை மேலவை துணைத் தலைவர் புட்டண்ணா குரல் வாக்கெடுப்புக்கு விடுத்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பாஜக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். பாஜக

உறுப்பினர்களின் வெளிநடப்புக்கு இடையே சட்டத் திருத்தம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

## என்.சி.ஆர். பகுதியில் தக்காளி விலை தொடர்ந்து உயர்வு

தில்லி தேசியத் தலைநகர் வலயப் பகுதியில் தக்காளி விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கிலோ ரூ.100 வரை உயர்ந்துள்ளது. இந்தியாவில் பருமழை குறைந்துள்ளதால் தக்காளி வரத்தில் கடும் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. இதனால், தக்காளி விலையும் அதிகரித்துள்ளது. தில்லி ஆஸாத்பூர் மண்டியில் தக்காளியின் மொத்த விற்பனை விலை கிலோ ரூ.45-55 ஆக உள்ளது. அத்தியாவசியப் பொருள்கள் விலை உயர்வு நடுத்தர மக்களையும், ஏழைகளை யும் பாதிக்கச் செய்து வருகிறது. தக்காளி வரத்து குறைந்துள்ளதை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி விலையை அதிகரிக்கச் செய்யும் வகையில் பதுக்கல்காரர்களால் தக்காளி பதுக்கப்படுவதும் மக்களைப் பாதிப்புக்குள்ளாக்கி வருகிறது. இமாச்சல பிரதேசத்தில் பெய்து வரும் கடுமையான மழை, நாட்டின் தென் பகுதியில் பற்றாக்குறையான மழை ஆகியவை தக்காளி விநியோகத்தில் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. இதனால், விலையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. வடக்கு பிராந்தியப் பகுதிகளில் இருந்து வரத்து குறைந்துவிட்டதே தக்காளியின் விலை அதிகரிக்கக் காரணம் என தக்காளி வியாபாரிகள் கூறுகின்றனர். பல்வேறு பெரு நகரங்களில் தக்காளி கிலோ ரூ.60 முதல் ரூ.100 வரை விற்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## பாஜகவின் நதிகள் இணைப்புத் திட்டத்தை செயல்படுத்த தீவிர நடவடிக்கை!

பாஜகவின் கனவுத் திட்டமான நதிகளை இணைக்கும் முன்மொழிவை செயல்படுத்தும் வகையில் எதிர்காலத் திட்டத்தைத் தயாரிக்குமாறு நீர் வள அமைச்சகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மூத்த அமைச்சரான நிதின் கட்கரி தலைமையிலான குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம் (டி.டபிள்யூ.எஸ்.) இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. இது தொடர்பாக உமா பாரதி தலைமையிலான நீர் வளத் துறை அமைச்சகத்தின் செயலர் அலோக் ராவத்திற்கு, குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் செயலர் பங்கஜ் ஜெயின் ஜூலை 15-ஆம் தேதி எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பது: "நிலத்தடி நீர் வேகமாக குறைந்து வருவதால் பல மாநிலங்கள் அதிகமான அளவு தண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன. எனவே, நாட்டில் மேற்பரப்பு தண்ணீரின் விநியோகத்தை அதிகரிப்பதற்காக நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவது அவசியமாகிறது. சில மாநிலங்களில் நிலத்தடி நீர் ஆதாரங்களும், நீர்த்தேக்கம் மற்றும் அணைகளில் உள்ள தண்ணீர் இருப்பும் வேகமாகக் குறைந்து வருகிறது. மேலும், நீர் தேவைப்பாடும் வெகுவாக அதிகரித்து வருகிறது. இதனால், வறட்சி

போன்ற சூழல் உள்ளது. இதனால், நதிகள் இணைப்புக்கான எதிர்காலத் திட்டம், நாட்டில் உள்ள நீர் தொகுப்பு முறை, ஆற்று நீர் கடலில் கலப்பதை குறைப்பதன் மூலம் நாட்டிற்குள் மேற்பரப்பு நீரின் விநியோகத்தை அதிகரிப்பது ஆகியவற்றுக்கான திட்டத்தைத் தயாரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் நிலத்தடி நீரைப் பயன்படுத்தவும், நீர் சேமிப்பை மேற்கொள்ளவும் முடியும். அதிக நீர் நெருக்கடியைக் கொண்டுள்ள ராஜஸ்தான், கர்நாடகம் போன்ற சில மாநிலங்களுக்கு ஏற்பட்டுள்ள தொடர் தேவைகள் காரணமாக இந்த விவகாரத்தின் மீது அமைச்சகம் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தின் நகல் பிரதமரின் அலுவலகத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, நதிகள் இணைப்புக்கு கேரளம் போன்ற மாநிலங்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. மக்களவையில் கேரளத்தைச் சேர்ந்த புரட்சிகர சோஷலிஸ்ட் கட்சியின் (ஆர்எஸ்பி) உறுப்பினர் என்.கே. பிரேமச்சந்திரன் அண்மையில் பேசுகையில், "நதிகள் இணைப்புக்கு சம்பந்தப்பட்ட மாநிலம் அனுமதி இல்லாவிட்டால் அதை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. கேரளத்தில் 41 ஆறுகள் உள்ளன. இவை அனைத்தும் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக் கடலில் கலக்கின்றன. அதனால்தான், கேரளம் செழிப்பான நிலப் பகுதியாக உள்ளது. இங்குள்ள நதிகள் தமிழகத்திற்கோ அல்லது வேறு பிற ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளுக்கோ திருப்பிவிடப்பட்டால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும்' என்று கூறியிருந்தார். 1999 முதல் 2004-ஆம் ஆண்டு வரை மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் இருந்த போது அப்போதைய பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயியின் கனவான நதிகள் இணைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அண்மையில் நடந்த மக்களவைத் தேர்தலின் போது, "பாஜக மத்தியில் ஆட்சிக்கு வந்தால் முந்தைய தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் கனவுத் திட்டமான நதிகள் இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்' என்று பாஜக வாக்குறுதி அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 77.81 அடியாக உயர்வு



மேட்டூர் அணை நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 77.81 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு வரும் நீரின் அளவு விநாடிக்கு 40,215 கனஅடியாக உள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு 6,800 கனஅடியாக உள்ளது. அணையின் நீர் இருப்பு 39.80 டிஎம்சி என பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் அணையின் நீர்மட்டம் கடந்த 3 நாட்களில் 10 அடி உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு



திங்கள்கிழமை மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் கடந்த சில நாள்களாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், திங்கள்கிழமையும் மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுவையில் ஆங்காங்கே மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும். சென்னையை பொருத்தவரையில் வானம் மேகமூட்டமாக இருக்கும். மாலை அல்லது இரவில் மழை பெய்யும். இந்த நிலையில், கோவை மாவட்டம் சின்னக்கல்லாறில் ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 60 மி.மீ. மழை பெய்துள்ளது. வால்பாறையில் 40 மி.மீ. மழையும், புதுவையில் 30 மி.மீ. மழையும் பெய்துள்ளது. சிதம்பரம், மரக்காணம், நடுவட்டம், வந்தவாசி, போச்சம்பள்ளி ஆகிய இடங்களில் 20 மி.மீ. மழை பெய்துள்ளது. கேளம்பாக்கம், ஊத்தங்கரை, திண்டிவனம், பெரியாறு, செஞ்சி, ஆலங்காயம், பொள்ளாச்சி ஆகிய இடங்களில் 10 மி.மீ. மழை பெய்துள்ளது.

## அமராவதி ஆற்றுக்கு தண்ணீர் திறப்பு: கரூரை இன்று வந்தடையும் -ஆற்றில் முட்புதர் அகற்றும் பணி தீவிரம்

அமராவதி ஆற்றில் திறக்கப்பட்டுள்ள தண்ணீர் இன்று(திங்கள்கிழமை) கரூரை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே ஆற்றில் உள்ள முட்புதர்கள் அகற்றும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி அணை மூலம் கரூர் மாவட்டத்தில் உள்ள பழைய ஆயக்கட்டு பாசனப்பகுதிகள் சுமார் 5,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்நிலையில் கடந்த மூன்று ஆண்டுகளாக கரூர் மாவட்டத்திற்கு தண்ணீர் திறக்கப்படாததால் அமராவதி ஆறு நீரின்றி வறண்டு காணப்பட்டது. ஆற்றின் நீர்மட்டம் குறைந்ததால் பாசனப்பகுதியில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளிலும் நீர்மட்டம் குறைந்தது. 1000 அடிக்கும் மேல் ஆழ்குழாய் அமைத்தும் விவசாயிகளுக்கு நீர் கிடைக்கவில்லை. விவசாயமும் அடியோடு பாதிக்கப்பட்டது. கால்நடைகளுக்கு கூட தண்ணீர் கிடைக்காமல் போனது. இதனிடையே விவசாயிகள் கடந்த மாதம் அமராவதி ஆற்றில் தண்ணீர் திறக்கக்கோரி ஒத்தமாந்துறை என்ற இடத்தில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து அமராவதி வடிகால கோட்ட அதிகாரிகள் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதின்பேரில் 23-ம்தேதி தண்ணீர் திறக்கப்படும் என உறுதியளித்தனர். இதையடுத்து அணையின் நீர் பிடிப்பு பகுதியில் பலத்த மழை பெய்ததைத்தொடர்ந்து அணையில் நீர் மட்டம் 58 அடியாக உயர்ந்தது. இதனால் அணையில் 1.3 டிஎம்சிக்கு மேல் தண்ணீர் இருந்ததால் விவசாயிகளிடம் கூறியவாறு அணையில் இருந்து விநாடிக்கு 2,500 கன அடி வீதம் தண்ணீர் கடந்த 23-ம்தேதி திறக்கப்பட்டது. தண்ணீர் திறந்து 5 நாட்களாகியும் தண்ணீர் கரூரை

வந்து சேரவில்லை. இதனால் கடைமடை விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர். இது தொடர்பாக அமராவதி கோட்ட பொறியாளர் ஒருவர் கூறுகையில், அணையில் போதியளவு தண்ணீர் இருப்பு உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் தண்ணீர் இல்லாததால்தான் கரூர் மாவட்டத்திற்கு போதியளவு தண்ணீர் திறக்கப்படவில்லை. நிகழாண்டில் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் பலத்த மழை பெய்வதால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் நிகழாண்டில் தண்ணீர் கரூர் மாவட்டத்திற்கு போதிய தண்ணீர் கிடைக்கும். தற்போது திறக்கப்பட்ட தண்ணீர் அணையில் இருந்து 190 கி.மீ.தூரம் உள்ள செட்டிப்பாளையம் தடுப்பு அணைக்கு வந்துள்ளது. இந்த அணை இன்று நிரம்பிடும். நாளை(திங்கள்கிழமை) காலை கரூரைத் தொட்டுவிடும் என்றார். இதனிடையே ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டதையொட்டி நகராட்சி நிர்வாகம் சார்பில் ஆற்றில் உள்ள முட்புதர்களை பொக்லின் இயந்திரம் மூலம் அகற்றும் பணி ஞாயிற்றுக்கிழமை தீவிரமாக நடைபெற்றது.

## ஆடிப் பெருக்கு: மேட்டூர் அணையிலிருந்து கூடுதலாக 6000 கனஅடி தண்ணீர் திறப்பு

ஆடிப் பெருக்கைக் கொண்டாடும் வகையில், மேட்டூர் அணையிலிருந்து கூடுதலாக நொடிக்கு 6,000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிட முதல்வர் ஜெயலலிதா ஆணையிட்டுள்ளார். இதுதொடர்பாக அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: ""வரும் ஆகஸ்ட் 3-ஆம் தேதியன்று ஆடிப் பெருக்கு விழாவை சீரோடும், சிறப்போடும், மகிழ்ச்சியோடும் கொண்டாடும் வகையில் மேட்டூர் அணையிலிருந்து கூடுதலாகத் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என காவிரிப் பகுதி மக்களிடமிருந்தும், விவசாயிகளிடமிருந்தும் கோரிக்கைகள் வந்தன. இதையடுத்து, மேட்டூர் அணையில் உள்ள நீர் இருப்பு, மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கும் நீர்வரத்து ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, காவிரிப் பகுதி மக்கள் ஆடிப் பெருக்கை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் ஜூலை 27-ஆம் தேதி முதல் ஆடிப் பெருக்கு தினமான ஆகஸ்ட் 3-ஆம் தேதி வரை மேட்டூர் அணையிலிருந்து குடிநீருக்காகத் திறந்துவிடப்பட்டுள்ள 800 கனஅடி நீருடன், கூடுதலாக நொடிக்கு 6,000 கன அடி தண்ணீர் திறந்துவிட ஆணையிட்டுள்ளேன்' என்றார் முதல்வர் ஜெயலலிதா.

## நெல் கொள்முதலுக்கு ஊக்கத்தொகை வழங்கத் தடை: மத்திய அரசுக்கு கண்டனம்

நெல் கொள்முதலுக்கு மாநில அரசுகள் ஊக்கத்தொகை வழங்க கூடாது என்ற மத்திய அரசின் உத்தரவுக்கு திமுக தலைவர் கருணாநிதி, மார்க்சிஸ்ட்

கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் ஆகியோர் கண்டனம் தெரிவித்தனர். கருணாநிதி: நெல் கொள்முதலுக்கு மாநில அரசுகள் ஊக்கத்தொகை வழங்க கூடாது என்று மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த ஊக்கத்தொகை எப்படி உருவானது என்பதைக் கூறுகிறேன். மத்திய வேளாண்மைத் துறை அமைச்சராக பாபு ஜெகஜீவன்ராம் இருந்த நேரத்தில் நெல் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்று தமிழக விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதுதொடர்பாக ஜெகஜீவன்ராமிடம் நான் கோரிக்கை வைத்ததும், மத்திய அரசால் இது முடியாது என்று தெரிவித்தார். எனினும், அவர் ஒரு யோசனையும் கூறினார். விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை என்ற பெயராலும், போக்குவரத்துச் செலவுகள் என்ற பெயராலும் ஒரு தொகையை மாநில அரசு கொடுக்கலாம் என்று கூறினார். அதன் பிறகுதான் இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தில்தான் விவசாயிகளுக்கு ரூ.15 ஊக்கத்தொகை என்ற பெயரில் அளித்தோம். இப்போது அதற்குத்தான் மத்திய அரசினால் ஆபத்து வரும் போல் தெரிகிறது. ஜி.ராமகிருஷ்ணன்: நெல், கோதுமை ஆகிய உணவுப் பொருள்களை கொள்முதல் செய்யும்போது மாநில அரசு விவசாயிகளுக்கு மானியம் கொடுக்க கூடாது என்று உத்தரவிட்டுள்ளது. இதை வன்மையாகக் கண்டிக்கிறோம். உலக வர்த்தக நிறுவனத்தில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையில் இந்தியா போன்ற நாடுகள் விவசாய விளைபொருள்களுக்கும், விவசாயத்துக்கும் ஆதரவாக விலையோ, மானியமோ வழங்கக்கூடாது என்று அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. மேலும் விவசாயப் பொருள்கள் கொள்முதலை கைவிட வேண்டும் என்றும் மேலை நாடுகள் இந்தியாவை வற்புறுத்துகின்றன. இந்த நிர்பந்தத்தை இந்தியா ஏற்றால், விவசாயிகள் பாதிக்கப்படுவதோடு, நாட்டின் உணவுச் சந்தையும் பன்னாட்டுக் கம்பெனிகளின் ஆதிக்கத்துக்குச் செல்லும் நிலை உருவாகும். எனவே, நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுக்கக் கூடாது என்ற முடிவை மத்திய அரசு கைவிட வேண்டும்.

**10 ஆண்டுகளுக்கு முன்பு இறந்த காளை மாட்டின் உயிரணுவில் இருந்து "குளோனிங்கில்' ஆண் கன்று**

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு இறந்த காளை மாட்டின் பதப்படுத்தப்பட்ட உயிரணுவில் இருந்து குளோனிங் முறை மூலம் ஆண் கன்றை உருவாக்கி இந்திய விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர். ஹரியாணா மாநிலம் கர்னாலில் உள்ள தேசிய பால்பண்ணை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குளோன் ஆராய்ச்சியில் புதிய சிகரத்தை எட்டியுள்ளனர். இது குறித்து இந்த நிறுவனத்தின் இயக்குனர் டாக்டர் ஏ.கே.ஸ்ரீவாஸ்தவா ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் கூறுகையில், ""பத்து ஆண்டுகளுக்கு

முன்பு இறந்துபோன காளை மாட்டின் பதப்படுத்தப்பட்ட உயிரணுவில் இருந்து ஆண் கன்றை உருவாக்கியுள்ளோம். சமீபகாலமாக நல்ல தரமான காளை மாடுகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்த "குளோனிங்' முறையை பயன்படுத்தி ஏராளமான காளை மாடுகளை உருவாக்க முடியும்" என்றார். ""ஜூலை 23-ஆம் தேதி பிறந்த இந்த ஆண் கன்றுக்கு ரஜத் என்று பெயர் சூட்டியுள்ளோம். இந்தக் கன்று பிறந்தபோது 32 கிலோ எடை இருந்தது" என்று தேசிய பால்பண்ணை ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. குளோனிங் முறையில் காளை மாடுகளின் உயிரணு மூலம் தரமான காளைகளையும், பசுக்களை குளோனிங் செய்து அதிக அளவில் பால் தரும் பசு மாடுகளையும் உருவாக்க முடியும். எஸ்.கே.சிங்லா, எம்.எஸ். செப்ஹான், ஆர்.எஸ்.மாணிக், பி.பால்டா, சிவ பிரசாத், அனுாஜ் ராஜா, அமோல் சஹாரே ஆகிய 7 பேர் கொண்ட விஞ்ஞானிகள் குழு இந்த ஆண் கன்றை குளோனிங் முறையில் உருவாக்கியது. வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கல்வித்துறை செயலாளர் எஸ். அய்யப்பன், குளோனிங் முறையில் ஆண் கன்றை உருவாக்கிய விஞ்ஞானிகளுக்கு பாராட்டு தெரிவித்தார். அவர் கூறுகையில், ""சந்ததி சோதனை அடிப்படையில் குளோனிங் முறையில் இந்த ஆண் கன்றை உருவாக்கி சாதனை படைத்திருப்பதுபோல், பசுங்கன்றுகளை உருவாக்கி நாட்டில் நிலவி வரும் பால் தேவைகளை எளிதில் பூர்த்தி செய்யலாம்" என்று தெரிவித்தார்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தொடரும் பருவமழையால் விவசாயிகள் மகிழ்ச்சி! அணை நீர்மட்டம் உயர்வால் இரட்டிப்பு**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி அருகேயுள்ள ஆழியாறு அணை தொடர் மழையால், நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே உள்ள ஆழியாறு அணை, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் முக்கிய அணையாக

உள்ளது. இந்த அணையில், சேகரிக்கப்படும் தண்ணீர் பழைய ஆயக்கட்டு, புதிய ஆயக்கட்டு, கேரள நீர் பாசனத்திற்கும் வழங்கப்படுகிறது. இது தவிர, குடிநீர் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழைய ஆயக்கட்டு பாசனத்தில் உள்ள ஆறு ஆயிரத்து 400 ஏக்கர் நிலங்களும்; புதிய ஆயக்கட்டு பாசனத்தில் 42 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு ஆழியாறு ஆறு மூலமாகவும்; புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு வேட்டைக்காரன்புதுார் கால்வாய் வழியாகவும் தண்ணீர் வழங்கப்படுகிறது. போதிய மழை இல்லாததால், அணையின் நீர்மட்டம் குறைந்தது. அணை நீர்மட்டம் குறைந்து வந்ததால், விவசாயப்பணிகள் பாதிப்பு மற்றும் குடிநீர் தட்டுப்பாடு போன்ற பிரச்னைகள் எழுமோ என்ற அச்சமும் நிலவியது. இந்நிலையில், கடந்த ஒரு மாதமாக தொடர் மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டமும் கிடு...கிடு..வென உயர்ந்து வருகிறது. ஆழியாறு அணையின் மொத்த கொள்ளளவான 120 அடியில், தற்போது, 80.90 அடியாக உயர்நதுள்ளது. அணைக்கு வினாடிக்கு 888 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. குடிநீர் தேவைக்காக, 85 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. மழை நிலவரம் (மி.மீ.,): ஆழியாறு-6.5, திருமூர்த்தி-1.0, அமராவதி - 1.0, வேட்டைக்காரன்புதுார் -2.0, பொள்ளாச்சி -9.0, அப்பர் ஆழியாறு -11.0, துாணக்கடவு-53.0, பெருவாரிப்பள்ளம்-61.0, நல்லாறு-9.0, நவமலை-6.4. நீர்வரத்தும் அதிகரிப்பு : தொடர் பருவமழை பெய்து வருவதால், அணைகளுக்கு நீர் வரத்தும் அதிகரித்து, நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும், தற்போது, பெய்து வரும் மழையை பயன்படுத்தி மானவாரி சாகுபடி பணிகளை மேற்கொள்ள விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## 'ஜிலீர்' மழையில் துளிர் விடும் நாற்றுகள்; விற்பனை ஜரூர்

பொள்ளாச்சி : தற்போது பெய்து வரும் தொடர் மழையால் பொள்ளாச்சி பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இங்கு பூ மற்றும் பழமர நாற்றுகள் விற்பனையும் ஜரூராக நடந்து வருகிறது. பொள்ளாச்சி பஸ் ஸ்டாண்ட் அருகே உள்ள நடைபாதையோரம் இந்த தற்காலிக கடையை விரித்துள்ளனர் சில வியாபாரிகள். கடலூரில் இருந்து குழுவாக வந்து, இங்குள்ள விடுதியில் தங்கி பூ

நாற்றுகள் மற்றும் பழமர நாற்றுகள் இந்த வியாபாரத்தை நடத்தி வருகின்றனர். ரோட்டில் போகும் யாரையும் கூவி அழைப்பதில்லை. ஆனால் மக்களாகவே வந்து ஆர்வத்துடன் நாற்றுகளை வாங்கி செல்லுகின்றனர். காரணம், 'சில்' என்ற பருவநிலையும், எப்போதும் தூறல் போடும் மழையும் நிலவும் நேரத்தில் நாற்றுகளை நட்டால், நன்கு வளரும் என்பது தான். இவர்களிடம், மல்லி, முல்லை, ரோஜா, அரளி உள்ளிட்ட பூ நாற்றுகள் கிடைக்கின்றன. அத்துடன் மா, கொய்யா, சப்போட்டா உள்ளிட்ட பழமரக்கன்றுகளும் விற்கப்படுகின்றன. அத்துடன், சவுக்கு, தேக்கு, சில்வர் ஓக், யூக்கலிப்டஸ் போன்ற மரக்கன்றுகளும் வைத்துள்ளனர்.இதில் குண்டு மல்லி நாற்றுகள் ராமேஸ்வரம் பகுதியில் இருந்தும், முல்லை நாற்றுகள் வேலூரில் இருந்தும், பழமரக்கன்றுகள் ஆந்தர மாநிலத்திலிருந்தும் வாங்கி வருகின்றனர். சவுக்கு உள்ளிட்ட பிற மரக்கன்றுகள் கடலூர் பகுதி நாற்றுப்பண்ணைகளில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளன. மூன்று குண்டு மல்லி நாற்றுகள் ரூ.20, இரண்டு முல்லை நாற்றுகள் ரூ.30, ஒரு அரளி நாற்று ரூ.20 என்ற விலையிலும், பழமரக்கன்றுகள் ஒன்று ரூ.20 என்றும், மரக்கன்றுகள் ஒன்று ஐந்து ரூபாய்கும்,ஆயிரம் சவுக்கு நாற்றுகள் கொண்ட கட்டு ரூ.600க்கும் விற்பனை செய்யப்படுகின்றன. நாற்று வியாபாரிகள் கூறுகையில், ஒவ்வொரு ஆண்டும் இந்த தென்மேற்கு பருவமழைக்காலத்தில் இங்கு வருவோம். இங்கு மழை சீசன் முடிந்தவுடன் வேறு ஊர்களுக்கு போய் விடுவோம்'என்றனர்.

## கால்நடைத்துறை செயல்விளக்கம்

பொள்ளாச்சி : பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட பெரிய நெகமம் காளியப்பம்பாளையத்தில், கால்நடைத்துறை செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சண்முகப்பிரியா வரவேற்றார். டாக்டர் பாஸ்கர், பொட்டாசியம் பெர்மாங்கனேட், பேட்டிகால், ஒஸ்டோவிட் மற்றும் ைஹடெக் ஊசி மருந்து அளிப்பது குறித்த செயல்விளக்கம் அளித்தார். வாய்ச்சப்பை நோய் மற்றும் மடிவீக்கம் கட்டுப்படுத்த பொட்டாசியம் பெர்மாங்கனேட் மருந்தை தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஒட்டுண்ணி தாக்குதலிலிருந்து விடுபட பேட்டிகால் மருந்தை பயன்படுத்த வேண்டும். கால்சியம் சத்தை அதிகரிக்க ஒஸ்டோவிட்

மருந்தை காலையிலும், மாலையிலும் தண்ணீருடன் கலந்து கொடுக்க வேண்டும். அதிகப்படியான உனி மற்றும் புண்களை கட்டுப்படுத்த ைஹடெக் ஊசி மருந்தை பயன்படுத்துதல் வேண்டும் உள்ளிட்ட பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டது. அட்மா திட்டம் குறித்து தொழில்நுட்ப வல்லுநர் உமாஷாலினி பேசினார். அட்மா தொழில்நுட்ப வல்லுநர் நாகராஜ் நன்றி கூறினார். இந்த செயல்விளக்க திடலில், 20 விவசாயிகள் பங்கேற்றனர்.

## ஊடுபயிராக பாக்கு மரங்களை பயிரிட விவசாயிகளுக்கு அறிவுரை

உடுமலை : 'பாக்கு மரங்களை கலப்பு அல்லது ஊடுபயிராக பயிரிடுவதன் மூலம், விவசாயிகள் கூடுதல் வருவாய் பெறலாம்,' என, தோட்டக்கலைத்துறை தெரிவித்துள்ளது. உடுமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் இளங்கோவன் அறிக்கை: நல்ல வடிகால் வசதியுடைய எல்லா மண்ணிலும், தனி, கலப்பு அல்லது ஊடுபயிராக பாக்கு மரங்கள் நடவு செய்யலாம். மங்களா, சுபமங்களா, சுமங்களா, ஸ்ரீமங்களா மற்றும் லாபம் தரும் மொகித்நகர் ரகங்கள் ஏற்றவையாக உள்ளன.இப்பயிர்களை இம்மாதம் அல்லது நவம்பரில், நடவு செய்யலாம். கன்று தயாரிக்க, 30 செ.மீ.,க்கு 50 செ.மீ., என்ற அளவுடைய பைகளில், நல்ல உரக்கலவையை இட்டு, நல்ல முதிர்ந்த விதைகளை முளைக்க வைத்து 3 இலைகள் வந்த கன்றுகளை நடவுக்கு பயன்படுத்தலாம். பாக்கு நாற்றுகள் நடவு செய்ய 3 அடி நீள, அகலத்தில், 3 அடிக்கு ஆழமாக தோண்டி குழி எடுக்க வேண்டும். அங்கு, தழைகள் சேகரித்து, மட்க விடலாம். குறிப்பாக, ஆடாதொடை, கொளுஞ்சி, வேம்பு இலை, கிளைரிசிடியா, கொடிப்பூவரசு, மா, இலை கீழே விழுந்து சேகரிக்கப்பட்ட, இலைகள் பயிர்க்கழிவுகள் புண்ணாக்கு வகைகளில் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை குழியில் இடலாம். முறையாக பராமரிப்பு மேற்கொண்டால், விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கும். மேலும் விவரங்களுக்கு, 98420 07125 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## குறுவை சாகுபடிக்கு ஆயத்தம்; டெல்டாவில் 30 ஆயிரம் டன் உரம் குவிப்பு

சேலம்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வரும் நிலையில், காவரி டெல்டா மாவட்டங்களில், குறுவை சாகுபடிக்காக, ஜூலை மாதத்தில் மட்டும், 30

ஆயிரம் டன் உரங்கள், வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் ஆகியோர் வாங்கி குவித்துள்ளனர். காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தென்மேற்கு பருவ மழையால், கர்நாடகா அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து, உபரிநீர் தமிழகத்துக்கு திறந்து விடப்படுகிறது. திறந்து விடப்படும் நீரின் அளவு, நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதனால், மேட்டூர் அணையின் நீர் மட்டம், 74 அடியை தொட்டது.இந்நிலையில், கர்நாடகா மாநிலத்தில், பருவ மழையின் தாக்கம் அதிகமாக உள்ளது. அதனால், ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில், மேட்டூர் அணையின் நீர் மட்டம், 90 அடியை தொடும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகஸ்ட் கடைசி வாரத்தில், டெல்டா மாவட்டங்களின், குறுவை சாகுபடிக்காக, அணை திறக்க வாய்ப்புள்ளது. இந்நிலையில், டெல்டா மாவட்ட வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், தனியார் உர விற்பனை நிலையங்களில், உரங்களை இருப்பு வைக்கும் பணி நடந்து வருகிறது. அந்த வகையில், ஆந்திரா, ஒடிஸா, மத்திய பிரதேசத்தில் இருந்து மட்டுமின்றி, வெளி நாடுகளில் இருந்தும், உரங்கள் அதிகளவில் வரவழைக்கப்பட்டுள்ளது.இப்கோவின் காம்ப்ளக்ஸ், யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ் உள்ளிட்ட உரங்கள் தற்போது அதிகளவில் கொண்டு வரப்படுகிறது. இதில், பொட்டாஷ், டி.ஏ.பி., உரங்கள் வெளிநாடுகளில் இருந்து, கப்பல் மூலம், தூத்துக்குடி துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து சரக்கு ரயில் மூலம், சப்ளை செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையில், சேலம் ரயில்வே கூட்ஷெட்டுக்கு, ஜூலை மாதத்தில் மட்டும், 10 ஆயிரம் டன் உரம் வந்துள்ளது. இந்த உரங்கள், சேலம், தர்மபுரி, நாமக்கல், ஈரோடு மாவட்ட வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கும், தனியாருக்கும் சப்ளை செய்யப் பட்டுள்ளது.அதேபோல், நாமக்கல், திருச்சி கூட்ஷெட்களுக்கு தலா, 10 ஆயிரம் டன் என்ற வகையில், 20 ஆயிரம் டன்னும், தஞ்சாவூர் கூட்ஷெட்டுக்கு, 20 ஆயிரம் டன் என, ஜூலை மாதத்தில் மட்டும், தமிழகத்தின் டெல்டா மாவட்ட விவசாயத்துக்காக, 30 ஆயிரம் டன் உரங்கள் வந்துள்ளது. இந்த உரங்கள் அனைத்தும், கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டுமின்றி, தனியாருக்கும் சப்ளை செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை கூட்டுறவு சங்க அதிகாரி ஒருவர் கூறியதாவது:திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் கரூர், ஈரோடு மாவட்டங்களில் நடப்பாண்டில் தட்டுப்பாடு இல்லாமல் உரங்களை சப்ளை செய்ய, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்

பட்டுள்ளது.அந்த வகையில், தமிழகத்தின் அனைத்து வேளாண்மை விவசாய கூட்டுறவு சங்கங்களிலும், தேவையான அளவு, அனைத்து ரக உரங்களும் இருப்பு வைக்கப்பட்டு வருகிறது. தனியாரும், உரங்களை வாங்கி குவித்து வருகின்றனர். ஜூலை மாதத்தில் மட்டும், 30 ஆயிரம் டன் உரங்கள், டெல்டா மாவட்டங்களுக்கு வரவழைக்கப்பட்டு, இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்துக்காக, 75 ஆயிரம் டன் உரங்களுக்கு, தயாரிப்பு நிறுவனங்களுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளது. இதில், 50 ஆயிரம் டன் உரங்கள், ஆகஸ்ட் மாதத்தில் வந்து சேர்ந்து விடும், மீதமுள்ள, 25 ஆயிரம் டன் உரங்களும், விரைவில் வரும் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு, அவர் கூறினார்.

## விலையில்லா கறவை பசுக்கள் வழங்கி 7,500 லிட்டர் பால் கூடுதல் கொள்முதல்; ஸ்ரீரங்கம் விழாவில் அமைச்சர் தகவல்

திருச்சி: ""விலையில்லா கறவை பசுக்கள் வழங்கியதால், நாள்தோறும், 7,500 லிட்டர் பால் ஆவின் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது'' என, கதர் மற்றும் கிராம தொழில் துறை அமைச்சர் பூனாட்சி தெரிவித்தார். திருச்சி அருகே, ஸ்ரீரங்கம் வடக்கு பாகனூர் கிராமத்தில், பயனாளிகளுக்கு விலையில்லாத கறவை பசுக்கள், ஆடுகள் வழங்கும் விழா, மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமையில் நடந்தது.விழாவில், 40 பயனாளிகளுக்கு, 5.28 லட்ச ரூபாய் செலவில் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கிய அமைச்சர் பூனாட்சி பேசியதாவது: தமிழக பெண்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த முதல்வர் ஜெயலலிதா, பெண்களுக்கு அளவில்லாத திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். 30 சதவீதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பெண்களுக்கு, விலையில்லாத ஆடுகள் வழங்கப்பட்டு வருகிறது. திருச்சி மாவட்டத்தில், விலையில்லாத கறவை பசுக்கள் வழங்கியதன் மூலம், நாள்தோறும், 7,500 லிட்டர் பால், ஆவின் மூலம் கூடுதலாக கொள்முதல் செய்யப்படுகிறது.கடந்த மூன்றாண்டுகளில், 32 கிராமங்களில், 5.05 கோடி ரூபாய் மதிப்புள்ள, 1,550 கறவை பசுக்கள், 26.05 கோடி ரூபாய் மதிப்புள்ள வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளது. இதில், விலையில்லாத கறவை பசுக்கள், 982 கன்றுகளும், வெள்ளாடுகள், 54,126 குட்டிகளும் ஈன்றுள்ளது. கடந்த, 2013-14ம் ஆண்டில் கால்நடை பாதுகாப்பு திட்டத்தில், 8.27 லட்ச ரூபாய் மதிப்பில், 197 மருத்துவ

முகாம்கள் நடத்தப்பட்டு, 5,910 கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூற்றல் செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒரு லட்சத்து, 28 ஆயிரத்து, 50 ஆடுகளுக்கு குடற்புழு சிகிச்சையும், 4,334 கால்நடைகளுக்கு மலடு நீக்க சிகிச்சையும், 1,970 கன்றுக்கு சிறப்பு பரிசும் வழங்கப்பட்டுள்ளது. நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டத்தில், 435 பயனாளிகளுக்கு தலா, 250 கோழி குஞ்சுகள், 1.06 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் பேசினார்.அரசு தலைமை கொறடா மனோகரன், எம்.பி., ரத்தினவேல், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் ராஜாத்தி, பஞ்சாயத்து யூனியன் தலைவர் முத்துகருப்பன், பஞ்சாயத்து தலைவர் ராஜேஸ்வரி, கால்நடை பராமரிப்பு துறை இயக்குனர் மோகனரங்கன், உதவி இயக்குனர் சுந்தர்ராஜ் உள்பட பலர் விழாவில் பங்கேற்றனர்.

## தோட்டக்கலை முன்பருவ பயிற்சி முகாம்

புதுச்சேரி : புதுச்சேரி அரசு வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில், திருக்கனூார் கிராமத்தில் ஆடிப்பட்ட தோட்டக்கலை முன்பருவ பயிற்சி முகாம் நடந்தது. துணை வேளாண் இயக்குனர் சிவபெருமான் வரவேற்றார். தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி இணை வேளாண் இயக்குனர் ராகவன் பேசினார்.கூடுதல் வேளாண் இயக்குனர் ஜெயசங்கர் முகாமை துவக்கி வைத்தார். காரைக்கால் பஜன் கோவா, தோட்டக்கலை பிரிவு தலைவர் முகமது யாசின் பூக்கள் மற்றும் காய்கறிகளை புதிய முறையில் பயிரிடுவது பற்றி பயிற்சி அளித்தார்.தேனீ வளர்ப்பு பற்றி விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.வேளாண் அலுவலர் தேன்மொழி நன்றி கூறினார்.

## உள்ளம் கவர்ந்த கொற்றலை நிலத்தடி நீரால் வர்ணஜாலம்

பள்ளிப்பட்டு: கொற்றலை நதிக்கரையில், நிலத்தடி நீர் வளத்தால், பயிர்கள் கண்ணுக்கெட்டிய துாரம் வரை பச்சைப்பசேலென செழித்து வளர்ந்துள்ளன.
பள்ளிப்பட்டு அடுத்த, சொரக்காய்பேட்டை பகுதியில், கொற்றலை ஆற்றின் குறுக்கே பொதுப்பணி துறை சார்பில், தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. இதில், நவம்பர் முதல், மார்ச் வரை, ஆண்டுதோறும் தண்ணீர் தேங்கி நிற்கும். இதன் காரணமாக, இந்த பகுதியில் நிலத்தடி நீர்மட்டம், 30 அடிக்கு குறைவதில்லை. ஒன்றியத்தின் மற்ற பகுதிகளில், 500 அடி ஆழத்திலும் தண்ணீர் கிடைக்காதது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக, சொரக்காய்பேட்டை, நெடியம், கொளத்துார்

உள்ளிட்ட பகுதிகளில் நெல், தென்னை அதிகளவில் பயிரிடப்படுகிறது. கண்ணுக் கெட்டிய தூரம் வரை பச்சைப்பசேலென வயல்வெளி, கண்ணுக்கு விருந்தாகிறது. நெடியம் கஜகிரி செங்கல்வராயன் மலையில் இருந்து, இந்த ரம்மியமான காட்சியை கண்டு ரசிக்கவும், சுத்தமான காற்றை சுவாசிக்கவும், ஏராளமான பகுதிவாசிகள் வந்து செல்கின்றனர்.

## தரிசு நில மேம்பாடு திட்டம்; வேளாண்மை அதிகாரி ஆய்வு

உளுந்தூர்பேட்டை : தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வரும் திட்டம் குறித்து கலந்தாய்வு கூட்டம் நடந்தது. உளுந்தூர்பேட்டை அடுத்த அஜீஸ்நகரில், தரிசு நிலங்களை தொகுப்பு வாரியாக சாகுபடிக்கு கொண்டு வரும் திட்டத்தின்படி, விவசாயிகளுடனான கலந்துரையாடல் நடந்தது. வேளாண்மை இயக்குநர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார்.சென்னை வேளாண் இணை இயக்குநர் முகமதுஇக்பால், தாசில்தார் உமாதேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். உளுந்தூர்பேட்டை வேளாண் உதவி இயக்குநர் கருணாநிதி வரவேற்றார்.ஆதிதிராவிடர் நல தனி தாசில்தார் குமாரபாலன், மண்டல துணை தாசில்தார் வெங்கடேசன், விழுப்புரம் இணை இயக்குநர் ராஜாமணி, துணை இயக்குநர் ரத்தினசபாபதி, தோட்ட கலை துணை இயக்குநர் ராஜூ, வேளாண் உதவி இயக்குநர்கள் கோவிந்தன், தேவநாதன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் செல்வி உட்பட பலர் கலந்து கொண்டனர்.கூட்டத்தில், வேளாண் இயக்குநர் ராஜேந்திரன் பேசுகையில், உளுந்தூர்பேட்டை தாலுகா அஜீஸ்நகரில் முதற்கட்டமாக 177 பயனாளிகள் தரிசு நில மேம்பாட்டு திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.இதன்படி 150 ஏக்கர் முட்புதர்கள் அகற்றப்பட்டு, 100 ஏக்கர் உழவு செய்ய தயார்படுத்தப் பட்டுள்ளது. மழை தண்ணீர் தேங்கி நிற்பதற்காக 12 பண்ணை குட்டைகளும் அமைக்கப்படும் என தெரிவித்தார்.

## சித்தணியில் வெண்டை சாகுபடி செயல் விளக்கம்

மயிலம் : மயிலம் அடுத்த சித்தணி கிராமத்தில் வெண்டை சாகுபடி குறித்த செயல்விளக்க பயிற்சி முகாம் நடந்தது. சித்தணி ஊராட்சி மன்றத் தலைவர் ஆறுமுகம், முகாமை துவக்கி வைத்தார். கணேஷ், அமல் ஸ்டான்லி, நவீன் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சந்திரபிரகாஷ், சுதாகர் ஆகியோர் வரவேற்றனர்.முகாமில், ஆதிபரா சக்தி வேளாண்மை தோட்டக் கலை கல்லூரி

மாணவர்கள் பங்கேற்று, விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர். தோட்டக் கலைத்துறை மாணவர்கள் வெண்டை சாகுபடி செய்யும் முறைகள், பயிர் பாதுகாப்பு, இயற்கை உரத்தின் அவசியம், விதை நேர்த்தி ஆகியவை குறித்து செயல்விளக்கம் செய்தனர். இதில் ஸ்ரீசபரிஸ்வரன், சரவணகுமார், விவசாயிகள் சத்தியமூர்த்தி, ஆசைதம்பி மற்றும் பலர் கலந்துக் கொண்டனர்.

## இலவச ஆடுகள் வழங்கும் விழா..

விக்கிரவாண்டி : விக்கிரவாண்டி ஒன்றியம் வி.சாலை ஊராட்சியில் இலவச ஆடுகள் வழங்கும் விழா நடந்தது. ஊராட்சி தலைவர் செங்கல்வராயன் தலைமை தாங்கினார். எம்.பி., ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். மாநிலங்களவை எம்.பி., லட்சுமணன் கலந்து கொண்டு பயனாளிகள் 37 பேருக்கு ரூபாய் 4 லட்சத்தி 73 ஆயிரத்தி 600 மதிப்பில் 37 யூனிட் இலவச ஆடுகளை வழங்கி பேசினார். கால் நடை மருத்துவர் டாக்டர் யுவராஜ், வி.ஏ.ஓ., ரபீக், நிலவள வங்கித் தலைவர் வேலு, மாவட்ட சேர்மன் அலமேலு வேலு, ஒன்றிய சேர்மன் சுமதி நாகப்பன், துணை சேர்மன் வித்யா முகுந்தன், கூட்டுறவு அச்சக சங்க தலைவர் கலியமூர்த்தி, கூட்டுறவு பண்டக சாலை தலைவர் பசுபதி, வங்கி தலைவர்கள் அற்புத வேலு, சரவணக்குமார், முருகன், ஒன்றிய கவுன்சிலர் கலைமதி பன்னீர் , சிற்றுராட்சிகள் சங்க செயலாளர் ராஜாங்கம், ஊராட்சி தலைவர்கள் ஸ்ரீதர், வாசு பிரகாஷ், மாவட்ட பிரதிநிதி கிருஷ்ணமூர்த்தி, சுப்பிரமணியன், கிருஷ்ணமூர்த்தி, மன்ற துணைத் தலைவர் வனத்தையன், மன்ற உறுப்பினர்கள் அய்யனாரப்பன், பாலு, ஜீவா, அருள்மணி, செல்வம் , ஊராட்சி செயலாளர் அலமேலு உட்பட பலர் கலந்து கொண்டனர் .

## அணையை ஒப்படைக்க வனத்துறை தயக்கம்; தடப்பள்ளி விவசாயிகள் கலெக்டருக்கு மனு

கோபிசெட்டிபாளையம்: வரட்டுப்பள்ளம் அணை, பொதுப்பணித்துறை வசம் ஒப்படைக்க மறுக்கும், வனத்துறையிடம் இருந்து பெற்றுத்தர கோரி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் பவானி நதி பாசன விவசாயிகள் சங்கம், கலெக்டர் சண்முகத்திடம் மனு வழங்கி முறையிட்டனர். இதுபற்றி, பாசன விவசாயிகள் சங்க தலைவர் தளபதி கூறியதாவது: அந்தியூர் தாலுகா, காக்கராயன்பாளையம்

கிராமத்தில், 1974-78ல், இரண்டு லட்சம் ரூபாய் செலவில், மலைப்பகுதியில் இருந்து, மழை பொழித்து, ஓடி வரும் நீரை தடுக்க, வரட்டுப்பள்ளம் அணை கட்டப்பட்டது. அந்த அணை கட்டப்பட்ட, 166 ஏக்கர் நிலம், அன்றைக்கு வனத்துறைக்கு சொந்தமானதாக இருந்தது.அன்றைய அரசின் நில வழிகாட்டு மதிப்பின்படி, பொதுப்பணித்துறை, இந்நிலத்துக்கான தொகையை, வனத்துறைக்கு, மாவட்ட வருவாய்த்துறை மூலம் செலுத்தி, தங்களுக்கு அந்நிலத்தை ஒப்படைக்க கோரியது. பணத்தை பெற்ற வனத்துறை, நிலத்தை பொதுப்பணித்துறை வசம் ஒப்படைக்க ஒப்புக்கொண்டது. இந்த அணை, 1984ல் பயன்பாட்டுக்கு வந்தது. 3,500 ஏக்கர் நிலம் நேரிடையாகவும், 1,500 ஏக்கர் மறைமுக பாசனமும் பெற்றது. 15.5 மீட்டர் உயரம் கொண்ட, இம்மண் அணை மூலம், மக்கள் பயன்பெற்றனர்.இந்த அணையின் உபரிநீர், கெட்டிசமுத்திரம் ஏரி, அந்தியூர் ஏரி, சந்தியபாளையம் ஏரி, வேம்பத்தி ஏரி, ஆப்பக்கூடல் ஏரி என, பல ஏரிகளை நிரம்பிய பின், பவானி ஆற்றில் கலக்கும்படி, அரசர் காலத்தில், அமைக்கப்பட்டது. இந்நிலையில், கடந்த, 1977 அக்., ஒன்றில், வரட்டுப்பள்ளம் ஏரிக்கரை, 116 ஏக்கர் நிலத்துக்கான தொகையை பெற்றுக்கொண்ட, வனத்துறை, இன்று வரை நிலத்தையும், அந்நிலத்தின் மேல் அமைந்துள்ள, அணையின் கரைகள் மற்றும் இதர நிர்வாக பகுதிகளை, பொதுப்பணித்துறை வசம் ஒப்படைக்கவில்லை.கடந்தாண்டு, முதல்வர், 30 லட்சம் செலவில், வரட்டுப்பள்ளம் அணை, சுற்றுலா தலமாக ஆக்கப்படும், என, சட்டசபையில் அறிவித்தார்.அந்தியூர் எம்.எல்.ஏ., ரமணீதரன் மற்றும் அரசுத்துறை சார்பில், இத்திட்டத்துக்கான அடிக்கல் நட்டு, பூமி பூஜை நடந்தது.ஆனால், அடுத்த நாளே, வனத்துறை, அடிக்கல் நட்டிய கல்லை பெயர்த்து அகற்றியது. அணை பராமரிப்பு, சீரமைப்பு, கசிவு, கரைகளை பலப்படுத்துதல், மதகுகளை சரி செய்தல் போன்ற பணிகள் செய்ய, வனத்துறை அனுமதிப்பதில்லை.நடப்பாண்டு, ஈரோடு மாவட்டத்தில் சிறு அணைகள், ஏரிகளை மேம்படுத்த, பல கோடி ரூபாய் ஒதுக்கியுள்ள நிலையில், வரட்டுப்பள்ளம் அணையில் இத்திட்டத்தை செயல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வறட்சியின் பிடியில் சிக்கிய விவசாயிகளின் வாழ்வாதாரம், கேள்விக்குறியாகி உள்ளது.தவிர, அணையின் பாசன கால்வாயின் குறுக்கே, அகழி வெட்டி வனத்துறை சிதைத்து உள்ளனர்.இந்நிலத்தை பொதுப்பணித்துறை வசம் ஒப்படைக்க கோரி,

டி.ஆர்.ஓ.,விடம், ஒன்பது முறை அழைப்பானை அனுப்பியும், மாவட்ட வன அலுவலர், அதை நிராகரித்துவிட்டார். எனவே, கலெக்டர் என்ற முறையில் தலையிட்டு, அணையை பொதுப்பணித்துறை வசம் ஒப்படைக்க வேண்டும், என்றார்.

### உச்சம் தொடும் காய்கறி விலை நுகர்வோர் எண்ணிக்கை சரிவு

வெள்ளகோவில்: வெள்ளகோவிலில், ஞாயிற்றுக்கிழமைகளில், வாரச்சந்தை நடக்கிறது. இங்கு, நேற்று முருங்கைக்காய், பச்சை மிளகாய், கிலோ, 70 ரூபாய், தக்காளி,40 முதல், 45, முருங்கைக்காய் செடிக்காய் ஒரு கிலோ,35, மரமுருங்கை, 20 முதல், 25 ரூபாய், இரண்டாம் ரக செடி முருங்கை, 15, மரமுருங்கை, பத்து முதல், 11 ரூபாய் வரை விற்பனையானது.சின்ன வெங்காயம்,35, பெல்லாரி, 35, உருளைக்கிழங்கு, 35, பாகற்காய், 40, பீர்க்கன்காய், 30, பச்சைப்பட்டாணி, 100, காளிபிளவர்,35, கேரட், 60, பீன்ஸ், 60, பீட்ரூட், 50, மேராக்காய், 40, கத்தரிக்காய்,40, முட்டைகோஸ், 25, சுரைக்காய், ஏழு முதல், பத்து ரூபாய்க்கு விற்பனையானது.கடந்த வாரம், கொத்துமல்லித்தலை பெரியகட்டு, 20 முதல், 25 ரூபாய்க்கும், சிறிய கட்டுகள், 15 ரூபாய்க்கும், கீரை வகைகள் கட்டுகள், 7.50க்கும், பொன்னாங்கன்னி ஒரு கட்டு, பத்து ரூபாய்க்கும் விற்றது.இதனால், வழக்கமாக, சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை குறைந்தது. தவிர, வாடிக்கையாக, 200 முதல், 350 ரூபாய் வரை மதிப்புடைய காய்கறி வாங்கும் வாடிக்கையாளர்கள், குறைந்த தொகைக்கே காய்கறிகளை வாங்கி சென்றனர்.

### பவானிசாகர் அணையில் இருந்து ஆக., 15க்குள் நீர் திறக்கப்படுமா?

சத்தியமங்கலம்: ஆகஸ்ட், 15ம் தேதி வழக்கம்போல், பவானிசாகர் அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படுமா, என, விவசாயிகள் எதிர்பார்த்துஉள்ளனர். ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணை. இந்த அணையின் நீர்பிடிப்பு பகுதியான, நீலகிரி மலைப்பகுதியில் போதிய மழையின்றி, கடந்த மாதம் வரை, அணையின் நீர்மட்டம், 40 அடிக்கும் கீழ் சரிந்து காணப்பட்டது.இந்நிலையில், கடந்த, 15 நாட்களுக்கு மேலாக, நீலகிரி மலைப்பகுதியான குன்னூர், கோத்தகிரி, கூடலூர், ஊட்டி உள்ளிட்ட பகுதியில், தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால்,

பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து, வினாடிக்கு சராசரியாக, 8,000 கனஅடிக்கு மேல் வந்தது.இதனால், அணையின் நீர்மட்டமும் மள, மளவென உயர்ந்து, நேற்று, 68 அடி ஆனது.இதனால், கடந்த வாரம் பவானிசாகர் அணையில் இருந்து, பவானி ஆற்றின் மூலம் தண்ணீர் திறக்கப்பட்டு, காலிங்கராயன் பாசனப்பகுதிக்கு தண்ணீர் விடப்படுகிறது.ஏற்கனவே, தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசன பகுதிக்கு, தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பவானிசாகர் அணையில் இருந்து, ஆகஸ்ட், 15ம் தேதி, கீழ்பவானி வாய்க்கால் பாசனத்துக்காக, தண்ணீர் திறப்பது வழக்கம். அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாவிடில், அணையில் இருந்து தண்ணீர் திறப்பது தடைபடும்.தற்போது அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வரும் நிலையில், ஆகஸ்ட், 15ம் தேதி பவானிசாகர் அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படும், என விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர்.இதுகுறித்து, பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "அணையில் இருந்து தண்ணீர் திறக்க, அரசிடம் இருந்து உத்தரவு வந்தால், உடனே திறக்கப்படும்.போதிய அளவு நீர் இருப்பும், வரத்தும் உள்ளது,' என நம்பிக்கையுடன் தெரிவித்தனர்.

## ஊக்கத்தொகை வழங்க மத்திய அரசு எதிர்ப்பு; மறுபரிசீலனை செய்ய விவசாயிகள் முறையீடு

தாராபுரம்: கோதுமை உட்பட பல்வேறு பொருட்களுக்கு, மத்திய அரசு வழங்கும் குறைந்த பட்ச ஆதரவு விலையுடன், மாநில அரசுகள், கூடுதல் ஊக்கத்தொகை வழங்கி, கொள்முதல் செய்யக்கூடாதென்ற மத்திய அரசின் அறிவிப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென, தமிழ்நாடு விதை உற்பத்தியாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இதுபற்றி, விதை உற்பத்தியாளர் சங்க செயலாளர் காளிதாஸ் மத்திய, மாநில அரசுக்கு அனுப்பிய மனுவில் கூறியதாவது: அரிசி, கோதுமை உட்பட, பல்வேறு உணவு தானியங்களுக்கு மத்திய அரசு வழங்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையுடன், மாநில அரசு கூடுதலாக இடைநிகழ் செலவுகளுக்கான ஊக்கத்தொகை வழங்கி, கொள்முதல் செய்யக்கூடாது என, மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.இதனால், விவசாயிகளுக்கு கிடைக்கும் உபரி வருவாய் பாதிப்பதுடன், நெல் உட்பட, பல்வேறு தானிய பொருட்களின் சாகுபடி

பரப்பு குறைந்து, மாநில உணவு தானிய கையிருப்பில் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு உள்ளது. மாநில அரசு, விவசாயிகளின் நலன் சார்ந்த திட்டங்களில் தலையிடுவதை, மத்திய அரசு மறுபரிசீலினை செய்ய வேண்டும். நடப்பு ஆண்டில் வரும், அக்டோபர் மாதத்தில் நெல் கொள்முதல் செய்யப்பட உள்ளது. மத்திய அரசு, குவிண்டாலுக்கு, 1,400 ரூபாய் உடன், மாநில அரசு, 200 ரூபாய் சேர்த்து, 1,600 ரூபாயாக வழங்கி வருகிறது. நடப்பு நிதியாண்டில், சான்று விதை, 40 ஆயிரம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது. தென்மேற்கு பருவ மழை மற்றும் வடகிழக்கு பருவ மழையை பொறுத்து, மொத்த உற்பத்தி, 80 மெட்ரிக் டன் என்ற அளவை எட்ட வாய்ப்பு உள்ளது.தமிழக முதல்வரின் நீண்ட போராட்டத்துக்குப்பின், காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு, அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. மத்திய அரசு, விரைவாக காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் பங்கீட்டு குழுவை அமைத்து, தமிழக விவசாயிகளின் நலன் காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளி மாநில விதைகளின் பங்களிப்பால், தமிழ்நாடு இடுபொருள் சந்தையில், தமிழக ரகங்களின் தேவையில் மாற்றம் இருக்க வாய்ப்பு உள்ளது. தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம், மார்க்கெட் மதிப்புடைய, உயர் விளைச்சல் ரகங்களை வெளியிட வேண்டும். உணவு பாதுகாப்பு மசோதாவில், தமிழக அரசு சுட்டிக்காட்டி உள்ள முரண்பாடுகளை களைய, உரிய திருத்தங்களை மத்திய அரசு கொண்டு வந்து, பொது வினியோக திட்டத்தை, மாநில அரசு தொடர்ந்து நடத்த வேண்டும், என கேட்டுக்கொண்டார்.

## வீணாகும் மழை நீர் ஊரணியில் சேகரிப்பு

கீழக்கரை : திருப்புல்லாணி மதகு குட்டம் ஊரணியில் கடலுக்கு வீணாக செல்லும் மழைநீர் முறையாக சேகரிக்கப்பட்டு நிரம்பி உள்ளன. திருப்புல்லாணி யூனியன் அலுவலகம் அருகிலுள்ள மதகு குட்டம் ஊரணி 12 ஏக்கர் பரப்பளவு கொண்டது. கடந்தாண்டு இந்த ஊரணி தூர்வாரப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்பட்டன. சமீபத்தில் பெய்த கோடை மழையில் இந்த ஊரணி பாதியளவே நிரம்பின. மழை காலத்தில் ரோட்டை ஒட்டிய பாலத்தின் ஓடைகளில் இருந்து பெருக்கெடுக்கும் நீர் வீணாக கடலில் சேர்ந்தது. இதை தடுக்கும் பொருட்டு, தற்போது ஒன்றரை அடி அகலமுள்ள இரும்பு குழாய்களின் மூலம் நீர் உறிஞ்சப்பட்டு பெரிய கிணறுகளில் சேகரிக்கப்படுகிறது. பின்

மோட்டார் பம்பு செட் மூலம் மதகு குட்டம் ஊரணிக்கு நீர் கொண்டு செல்லப்படுவதால் ஊரணி நீர் நிரம்பி காட்சியளிக்கிறது. திருப்புல்லாணி, ஊராட்சி தலைவர் எஸ்.முனியசாமி: மதகு குட்டம் ஊரணி நீரை அருகிலுள்ள திருப்புல்லாணி ஆதிஜெகநாதப்பெருமாள் கோயில் சக்கர தீர்த்ததிற்கு கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, நீண்ட குழாய் பதிக்கப்பட்டுள்ளது. தற்போது, கொளுத்தும் கோடையிலும் நீர் வற்றாமல் உள்ளது. மேலும், இரண்டு ஊரணிகளை சுற்றிலும் வளர்ந்துள்ள நிழல் தரும் மரங்களுக்கு நீர் பாய்ச்ச வேண்டிய அவசியம் இல்லை, என்றார்.

## வாழையில் இலைப்புள்ளி நோய் கட்டுப்படுத்த வழிமுறைகள்

தேவதானப்பட்டி : பெரியகுளம் தாலுகா பகுதியில் வாழையில் காணப்படும் இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த தோட்டக்கலைத்துறை அதிகாரி ஆலோசனை கூறியுள்ளார். பெரியகுளம் அருகே உள்ள சில்வார்பட்டி, தேவதானப்பட்டி, குள்ளப்புரம், தென்கரை, வடகரை ஆகிய பகுதியில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. தற்போது சாரல் மழை மற்றும் காற்றில் ஈரப்பதம் அதிகரித்துள்ளது. வாழை இலையின் மேல்பகுதியில் வெளிரிய மஞ்சள் அல்லது பச்சை கலந்த மஞ்சள் நிறத்தில் சிறுகோடுகள் தோன்றி இலை நரம்புகளுக்கு இணையாகக் காணப்படும். நாளடைவில் வளர்ந்து நீள்வட்ட வடிவில் கரும்பழுப்பு நிறமாக மாறிவிடும். இந்த புள்ளியின் நடுப்பகுதி சாம்பல் நிறத்திலும், ஓரப்பகுதியில் மஞ்சள் நிற வளையமும் காணப்படும். பெரியபுள்ளிகளாக மாறி இலைகள் காய்ந்துவருகின்றன. இலை காம்பு பகுதி ஒடிந்து தண்டைச் சுற்றி தொங்குகின்றன. இந்த நோய் பாதித்த வாழைக் காய்கள் மிகவும் சுருங்கியும், முதிர்ச்சியடையாமல் பிஞ்சிலேயே பழுத்தும் விடுகின்றன.இலைப்புள்ளி நோயினால் பச்சை வாழை, ரஸ்தாளி ஆகிய ரகங்கள் பாதிக்கப்படுகின்றன. பொதுவாக அக்.,முதல் ஜன., வரை இந்த நோய் தாக்குதல் காணப்படும். கட்டுப்படுத்தும் முறை: தோட்டங்களில் போதிய வடிகால் வசதி செய்ய வேண்டும். தண்ணீர் தேங்கக் கூடாது. களைகளை வெட்டி அழிக்க வேண்டும்.தேவையான இடைவெளியில் நடவு செய்ய வேண்டும்.காய்ந்த இலைகளை நீக்கி நிலத்துக்கு வெளியே கொண்டு சென்று எரித்து அழிக்க வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீரில் புரோபிகொனசோல் (டில்ட்) 2 மில்லி,

அல்லது ஹெச்சகொனசோல் (காண்டாப்) 2 மில்லி ஒட்டு திரவம் 1 மில்லி கலந்து இலைகளின் இருபுறமும் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும்.இவ்வாறு தோட்டக்கலை உதவி இயக்குநர் குமாரவடிவேல் கூறியுள்ளார்.

## நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த தடுப்பணைகள் தூர்வாரப்படுமா

தேவதானப்பட்டி : தேனி மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த வேளாண்மை பொறியியல்துறை, பொதுப்பணித்துறை சார்பில் ஓடைகளின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சிறிய,பெரிய தடுப்பணைகளை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும். தேனி மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவற்காக வேளாண்மை பொறியியல்துறை, பொதுப்பணித்துறை மற்றும் வனக்குழுக்கள், ஒன்றிய பொதுநிதிகளில் ஓடைகளின் குறுக்கே சிறிய, பெரிய தடுப்பணைகள் கட்டப்பட்டள்ளன. இதனால் தடுப்பணைகளை சுற்றியுள்ள விவசாய கிணறுகளுக்கு நீர் ஊற்றுக்கிடைத்து வருகிறது. கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆன நிலையில் பராமரிப்பு இல்லாமல் தடுப்பணைகள் மண்மேவி காணப்படுகிறது. சில இடங்களில் கரைகள் உடைந்தும். தடுப்பு சுவர்கள் சேதமடைந்துள்ளன. இதனால் மழைக்காலங்களில் மழைநீரை தேக்கி வைக்கமுடியவில்லை. தற்போது பெரியகுளம், ஆண்டிபட்டி, மயிலாடும்பாறை, தேனி உட்பட மாவட்டத்தின் பல பகுதிகளில் கடும் வறட்சி நிலவுகிறது. விவசாயப்பணிகள் நடைபெறவில்லை. கூலித்தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.வேலை தேடி பக்கத்து மாநிலங்கள், வெளி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு சென்று வருகின்றனர். மழைநீர் சேமிப்பு திட்டத்தை அரசு தீவிரப்படுத்தி வருகிறது. எனவே பல ஆண்டுகளுக்கு முன்பு பல்வேறு துறைகள் மூலம் சிறிய,பெரிய ஓடைகளின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பெரிய தடுப்பணைகள், ஊரணிகள், சிறுகுளங்களை கண்டறிந்து, பராமரிப்பு செய்து, தூர்வாரினால் வரும் மழைக்காலத்தில் கூடுதலான மழை நீரை தேக்கி வைக்க முடியும்.இதன் மூலம் நிலத்தடி மட்டம் உயரும். எனவே தடுப்பணைளை தூர்வார மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## ஆடு வளர்ப்பு பயிற்சி

மானாமதுரை : மானாமதுரை கால்நடை மருத்துவமனையில் பெண்களுக்கான ஆடு வளர்ப்பு குறித்த பயிற்சி உதவி இயக்குநர் சோமசுந்தரம் தலைமையில் நடந்தது. ஓடாத்தூர், பழையனூர் கிராமங் களைச் சேர்ந்த 61 பெண்களுக்கு ஆடுகளுக்கு கொட்டகை அமைப்பது, தீவனம் உற்பத்தி செய்வது குறித்து பயிற்சியளிக்கபட் டது. உதவி இயக்குநர் சோமசுந்தரம் கூறுகையில்: அரசின் விலையில்லா ஆடு பெறும் விவசாயிகளுக்கு மூன்று கட்ட பயிற்சியளிக்கப் படுகிறது. பயிற்சியில் ஆடு பராமரிப்பு, மருத்துவ சிகிச்சை குறித்து பயிற்சி அளிக்கப்படும், என்றார்.

## வெங்காய வணிக வளாகத்தில் வாரந்தோறும் 2 நாட்கள் ஏலம்

பெரம்பலூர்: செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில், வாரத்தில், இரண்டு நாட்கள் திறந்த முறை ஏலம் நடத்தப்படும், என பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில், ஜூலை, 17 மற்றும், 24ம் தேதிகளில் சின்ன வெங்காய ஏல விற்பனை நடத்தப்பட்டது. கடந்த, 24ம் தேதி நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, வாரத்தில் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் ஏலம் நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி, 28ம் தேதி (இன்று) மறைமுக ஏலத்திற்கு பதிலாக திறந்த முறை ஏலம் நடத்தப்பட உள்ளது. உடனடி பணப்பட்டுவாடா செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு வாரமும் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் திறந்த முறை ஏலம் நடக்கும். எனவே விவசாயிகள் தங்களிடமுள்ள சின்ன வெங்காயத்தை காலை, 11 மணிக்குள் செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்திற்கு கொண்டு வர வேண்டும். வியாபாரிகள் பெயரை பதிவு செய்த பின் ஏலத்தில் பங்கேற்கலாம்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**குறைந்த காற்றழுத்த பகுதி ஆந்திராவில் கனமழை பெய்ய வாய்ப்பு**



**ஐதராபாத்**

வங்காள விரிகுடா கடலின் வடமேற்கு திசையில் குறைந்த காற்றழுத்த பகுதி உருவாகி இருப்பதால் அடுத்த 48 மணிநேரத்திற்கு ஆந்திரா மற்றும் தெலுங்கானா கடலோர பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய கனமழையோ பெய்வதற்கு வாய்ப்பு இருப்பதாக நேற்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. தெலுங்கானவின் பல பகுதிகளிலும் ஆந்திரா கடலோர பகுதிகளில் சில இடங்களிலும் நேற்று மழை பெய்தது.

**வினாடிக்கு 38 ஆயிரம் கனஅடி நீர் வருகிறது 10 நாட்களில் நீர்மட்டம் 28 அடி உயர்வு மேட்டூர் அணை வேகமாக நிரம்புகிறது ஆடிப்பெருக்கு விழாவுக்காக தண்ணீர் திறக்க ஜெயலலிதா உத்தரவு**



**கர்நாடக** மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அங்குள்ள அணைகள் விரைவில் நிரம்பும் நிலையில் உள்ளன. கர்நாடக அணைகள்மைசூர் அருகே காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கிருஷ்ணராஜசாகர் அணைக்கு வினாடிக்கு 30 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு 12 ஆயிரத்து 500 கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது. கிருஷ்ணராஜசாகர் அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 124.8 அடி. நேற்றைய நிலவரப்படி அணையில் 113 அடி உயரத்துக்கு தண்ணீர் உள்ளது. இந்த அணை விரைவில் நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடல் மட்டத்தில் இருந்து 2,284 அடி உயரம் கொண்ட கபினி அணை ஏற்கனவே நிரம்பி விட்டதால், அணைக்கு வரும் 30 ஆயிரம் கனஅடி தண்ணீரும் அப்படியே திறந்து விடப்படுகிறது.

ஒகேனக்கல்லில் வெள்ளம்

கர்நாடக எல்லையில் உள்ள ஒகேனக்கல்லுக்கு நேற்று காலை வினாடிக்கு 38 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. இது படிப்படியாக உயர்ந்து மாலை 6 மணி நிலவரப்படி 42 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து, சுற்றுலா பயணிகள் அருவிகளில் குளிக்கவும், பரிசல்கள் இயக்கவும் விதிக்கப்பட்டுள்ள தடை நேற்று 10-வது நாளாக நீடித்தது.அங்கு போலீசார் மற்றும் வருவாய் துறையினர் முகாமிட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். வார விடுமுறை நாளான நேற்று ஆயிரக் கணக்கான சுற்றுலா பயணிகள் ஒகேனக்கல்லுக்கு வந்தனர். அவர்களை ஒகேனக்கல் எல்லையிலேயே போலீசார் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பினார்கள்.

மேட்டூர் அணை நிரம்புகிறது நேற்றைய நிலவரப்படி மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 38 ஆயிரத்து 826 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. அணையின் நீர் மட்டம் 74.7 அடியாக இருந்தது. அணையின் நீர்த்தேக்க பகுதியில் உள்ள இரட்டை கிறிஸ்தவ கோவில் கோபுரங்கள் மூழ்கும் நிலையில் உள்ளன. கடந்த 18-ந் தேதி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 47 அடியாக இருந்தது. கர்நாடகத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததால் காவிரியில் நீர்வரத்து அதிகரித்து அணையின் நீர்மட்டம் மளமளவென உயர்ந்து நேற்று 74.7 அடியை எட்டியது. அதாவது கடந்த 10 நாட்களில் மட்டும் நீர்மட்டம் 28 அடி உயர்ந்து இருக்கிறது. அதிக அளவில் தண்ணீர் வருவதால் அணை வேகமாக நிரம்பி வருகிறது.


ஆடிப்பெருக்கு விழா

குடிநீர் தேவைக்காக மேட்டூர் அணையில் இருந்து சுமார் ஒரு மாத காலமாக வினாடிக்கு 800 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், வருகிற ஆகஸ்டு 3-ந் தேதி ஆடிப்பெருக்கு விழா கொண்டாடப்படுகிறது. நாமக்கல், ஈரோடு, திருச்சி, தஞ்சை போன்ற காவிரி கரையோர மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் ஆடிப்பெருக்கு விழாவை சிறப்பாக கொண்டாடுவது வழக்கம்.

ஜெயலலிதா உத்தரவு

ஆடிப்பெருக்கினை முன்னிட்டு மேட்டூர் அணையில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறந்துவிட தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.இதுகுறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- விவசாயம் செழிக்க வேண்டி காவிரி அன்னைக்கு மலர் தூவி வணங்கும் விழா எனப்படும் ஆடிப்பெருக்கு விழா தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் வெகு விமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம். அந்த வகையில், வருகிற ஆகஸ்டு 3-ந் தேதியன்று ஆடிப்பெருக்கு விழாவினை தமிழக மக்கள் சீரோடும், சிறப்போடும், மகிழ்ச்சியோடும் கொண்டாடும் வண்ணம், மேட்டூர் அணையில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும் என்று காவிரி பகுதி மக்களிடமிருந்தும், விவசாயிகளிடமிருந்தும் எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. கூடுதலாக தண்ணீர் திறப்பு; தற்போது மேட்டூர் அணையில் உள்ள நீர் இருப்பு, மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கும் நீர் வரத்து ஆகியவற்றை கருத்தில் கொண்டு, காவிரி பகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் ஆடிப்பெருக்கினை கொண்டாடும் வகையில், இன்று (அதாவது நேற்று) முதல் ஆகஸ்டு 3-ந் தேதி வரை மேட்டூர் அணையிலிருந்து, தற்போது குடிநீருக்காக திறந்துவிடப்பட்டுள்ள 800 கன அடி நீருடன், கூடுதலாக வினாடிக்கு 6,000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு முதல்-அமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார். எனவே ஆடிப்பெருக்கு விழாவுக்காகவும், குடிநீர் தேவைக்காகவும் மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு நேற்று காலை 8 மணி முதல் வினாடிக்கு 6 ஆயிரத்து 800 கனஅடியாக அதிகரிக்கப்பட்டு உள்ளது. மின்உற்பத்தி அறிவிப்பு அணையில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீர், அணையையொட்டி அமைந்துள்ள அணை மின் நிலையம், சுரங்க மின் நிலையம் ஆகியவற்றின் வழியாக திறந்து விடப்படுவதால் இந்த மின் நிலையங்களில் நடைபெறும் மின்உற்பத்தியின் அளவு அதிகரித்து உள்ளது.

**நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பவானிசாகர் அணை நீர்மட்டம் 67 அடியாக உயர்வு**



நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 67 அடியாக உயர்ந்து உள்ளது. தொடர்ந்து மழை ; பவானிசாகர் அணை தென்னிந்தியாவின் மிகப்பெரிய மண் அணையாகும். மொத்தம் நீர்பிடிப்பு உயரம் 120 அடி. இதில் சேறும் சகதியும்போக நீர்பிடிப்பு உயரம் 105 ஆக கணக்கிடப்படுகிறது. அணையின் மொத்த கொள்ளளவு 32 டி.எம்.சி. ஆகும். இந்த அணையில் இருந்து வெளிவரும் தண்ணீரில் கீழ்பவானி வாய்க்கால் மூலம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலமும், பவானி ஆற்றில் இருந்து வெளிவரும் தண்ணீர் மூலம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனப்பகுதியை சேர்ந்த 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும் பாசன வசதி பெறுகிறது. நீலகிரி மலைப்பகுதி கோத்தகிரி, குன்னூர், கூடலூர் உள்ளிட்ட பகுதிகள் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளாகும். கடந்த சில மாதங்களாக மழை பெய்யாததால் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்து, நீர்மட்டம் குறைந்தது. இந்தநிலையில் கடந்த சில நாட்களாக நீர்பிடிப்பு பகுதியில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த 14–ந்தேதி நீர்மட்டம் 44 அடியாக இருந்தது. நீர்மட்டம் உயர்வு ; கடந்த 17–ந்தேதி அணையின் நீர்மட்டம் 53.62 அடியாக இருந்தது. தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாக அணையின் நீர்மட்டம் கடந்த 10 நாளில் 14 அடி உயர்ந்து 67 அடியாக உள்ளது. நேற்று மாலை 5 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 67.03. அணைக்கு வினாடிக்கு ஆயிரத்து 605 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. பவானி ஆற்றுக்கு 1,600 கனஅடி தண்ணீரும், கீழ்பவானி வாய்க்காலுக்கு 5 கனஅடி தண்ணீரும் பாசனத்துக்காக திறந்து விடப்படுகிறது.

**கர்நாடகாவில் கனமழை எதிரொலி காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து 42 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பு ஒகேனக்கல்லில் 10–வது நாளாக தடை நீடிப்பு**



**கர்நாடகாவில்** கனமழை எதிரொலியால் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து 42 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குளிக்கவும், பரிசலில் செல்லவும் தொடர்ந்து 10–வது நாளாக தடை நீடிக்கப்பட்டுள்ளது. கனமழை கர்நாடக மாநிலம் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருதால் அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர், ஹாரங்கி அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனையடுத்து அந்த அணைகளின் பாதுகாப்பு கருதி உபரி நீர் திறக்கப்பட்டு உள்ளது. இதனிடையே கபினி அணை தனது முழு கொள்ளளவை எட்டியதையொட்டி கூடுதலாக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒகேனக்கல் அருவிகள், நீர்வீழ்ச்சிகள், சினிபால்ஸ் ஆகிய இடங்களில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் தமிழக எல்லையான பிலிகுண்டுலு பகுதியில் கண்காணித்து வருகின்றனர். தினமும் காலை நேரத்தில் தண்ணீரின் அளவை பரிசலில் சென்று அளந்து அதிகாரிகளுக்கு தெரிவித்து வருகின்றனர். காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் கரையோரத்தில் வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு ஒலி பெருக்கி மூலமும், தண்டோரா போட்டும் எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

தடை நீடிப்பு

இந்த நிலையில் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து சுற்றுலா பயணிகள் அருவிகளில் குளிக்கவும், பரிசல்கள் இயக்கவும் மாவட்ட நிர்வாகம் விடுத்த தடை உத்தரவு தொடர்ந்து 10–வது நாளான அமலில் இருந்து வருகிறது. வார விடுமுறை நாளான நேற்று ஆயிரக்கணக்கான சுற்றுலா

பயணிகள் ஒகேனக்கல்லுக்கு வந்தனர். அவர்கள் ஒகேனக்கல் எல்லை பகுதிகளிலேயே போலீசார் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பப்பட்டனர். ஒகேனக்கல் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து நேற்று காலை வினாடிக்கு 38 ஆயிரம் கன அடியாக இருந்தது. இது படிப்படியாக அதிகரித்து மாலை 6 மணி நிலவரப்படி 42 ஆயிரம் கனஅடியாக அதகரித்தது. காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அவ்வப்போது அதிகரித்தும், குறைந்தும் காணப்பட்டது. இதனால் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிக்கு செல்லும் நடைபாதையில் அவ்வப்போது உள்ளே செல்ல முடியாத அளவுக்கு தண்ணீர் கரைபுரண்டு ஓடியது. வெறிச்சோடியது காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து ஒகேனக்கல் பகுதியில் போலீசார் மற்றும் வருவாய்த்துறையினர் முகாமிட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர். மேலும் ஆலாம்பாடி, மணல் திட்டு, சிறுவர் பூங்கா, முதலைப்பண்ணை உள்ளிட்ட பகுதிகளில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது கரையோரம் நின்று கொண்டு இருந்த பொதுமக்களை ஆற்றில் இறங்க வேண்டாம் என்று அறிவுறுத்தினர். வார விடுமுறை நாட்களில் எப்போதும் களை கட்டி காணப்படும் ஒகேனக்கல் கடந்த 15 நாட்களுக்கும் மேலாக வெறிச்சோடி காணப்படுகிறது. இதனால் மசாஜ் தொழிலாளர்கள், பரிசல் ஓட்டிகள், சமையல் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். மேலும் சுற்றுலா பயணிகள் வரத்து குறைந்து விட்டதால் அங்குள்ள வியாபாரிகள், விடுதி நடத்துபவர்கள், உணவகங்கள் நடத்துபவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## தொடர்ந்து உச்சத்தில் தக்காளி விலை: குறைந்த விலை காய்கறிகளை தேர்ந்தெடுத்து வாங்கிய பொதுமக்கள்



**சென்னை**,

கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி விலை ஓரளவு குறைந்து காணப்பட்டாலும், தக்காளி விலை தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. அதனால் குறைந்த விலை காய்கறிகளை தேர்ந்தெடுத்து பொதுமக்கள் வாங்கிச்செல்கின்றனர்.

**சில காய்கறிகளின் விலை குறைவு**

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்தும், தமிழ்நாட்டின் ஒரு சில இடங்களில் இருந்தும் காய்கறிகள் விற்பனைக்கு வருகின்றன. தினமும் 100-க்கும் மேற்பட்ட லாரிகளில் கொண்டு வரப்படும் காய்கறிகளை வியாபாரிகளும் மற்றும் பொதுமக்களும் வாங்கி செல்கின்றனர். கடந்த சில நாட்களாக சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை ஏற்றம் இறக்கமாகவே காணப்பட்டு வருகிறது. கடந்த வாரங்களில் விலை உயர்ந்து காணப்பட்ட சில காய்கறிகள் தற்போது குறைந்து காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக, கத்தரிக்காய் ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் நேற்று ஒரு கிலோ ரூ.15 ஆக குறைந்தது.

**தக்காளியின் விலை தொடர்ந்து**...

அதேபோல் கடந்த வாரங்களில் ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.30-க்கும், ஒரு கிலோ ரூ.150-க்கு விற்பனையான பச்சை பட்டாணி ரூ.100-க்கும், கொத்தமல்லி ஒரு கட்டு ரூ.60-க்கு விற்பனை யானது. நேற்று ஒரு கட்டு ரூ.10 முதல் ரூ.15 ஆக விலை சரிந்தது. ஒரு கிலோ ரூ.100-க்கு விற்பனையான இஞ்சி ரூ.60-க்கு விற்பனை செய்யப்பட்டது. இதேபோல், முட்டைக்கோஸ், புடலங்காய் போன்ற காய்கறிகளின் விலையும் குறைந்து காணப்பட்டது. ஆனால் மக்களின் அன்றாட வாழ்வில் அனைத்து விதமான குழம்புகளுக்கும் பயன்படுத்தப்படும் தக்காளியின் விலை தொடர்ந்து அதே விலையில் நீடித்து வருகிறது. அதே போல், பீன்ஸ், அவரைக்காய் போன்ற காய்கறிகளின் விலையும் அதிகரித்து தான் காணப்படுகிறது.

**விலையில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு**; சர்க்கரை நோயாளிகளின் வரப்பிரசாதமாக காணப்படும் பொடி பாகற்காய் ஒரு சில கடைகளில் விற்பனைக்கு இருந்தது. அந்த பாகற்காயை வாங்க மக்கள் அலைமோதினர். இதுதொடர்பாக கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்திரராஜன் நிருபரிடம் கூறியதாவது:- கடந்த சில வாரங்களாக காய்கறிகளின் விலை உயர்ந்து காணப்பட்டு வருகிறது. கடந்த வாரத்தில் விற்பனை செய்யப்பட்ட சில காய்கறிகளின் விலை சற்றே குறைந்துள்ளது. ஆனால் தக்காளியின் விலை தொடர்ந்து அதே விலையில் தான் இருக்கிறது. வரும் நாட்களிலும், தக்காளியின் விலை குறைய வாய்ப்பு இல்லை. ஆனால் மற்ற காய்கறிகளின் விலையில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. என்னதான் காய்கறிகளின் விலை கூடினாலும் மக்கள் காய்கறிகள் வாங்காமல் இருப்பதில்லை. எப்போதும் போலவே மக்கள் ஆர்வமுடனே வாங்கி செல்கின்றனர் என்றாலும், குறைந்த

விலை காய்களை தேர்வு செய்து வாங்கி செல்கின்றார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

**காய்கறிகளின் விலை**

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் வருமாறு:- (கிலோ ஒன்றுக்கு)தக்காளி-ரூ.50, பீன்ஸ்-ரூ.60, அவரை-ரூ.50, இஞ்சி-ரூ.60, கத்தரிக்காய்-ரூ.15, புடலங்காய்-ரூ.10, பச்சைப்பட்டாணி-ரூ.100, சாம்பார் வெங்காயம்-ரூ.30, கேரட்-ரூ.40, சவ்சவ்-ரூ.30, பீட்ரூட்-ரூ.30, சேனைக்கிழங்கு-ரூ.25, சேப்பங்கிழங்கு-ரூ.27, முருங்கைக்காய்-ரூ.30, பொடி பாகற்காய்-ரூ.35, வெண்டைக்காய்-ரூ.25, உருளைக்கிழங்கு-ரூ.25, பல்லாரி-ரூ.22, சுரைக்காய்-ரூ.15, பீர்க்கங்காய்-ரூ.35, முட்டைக்கோஸ்-ரூ.15, வாழைக்காய்-ரூ.6 (காய் ஒன்று)

**பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.2¼ கோடிக்கு கொப்பரை தேங்காய் ஏலம்**



**பெருந்துறை**, வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.2¼ கோடிக்கு கொப்பரை தேங்காய் ஏலம் பேனது. கொப்பரை தேங்காய் ஏலம்; பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு விவசாயிகள் 4 ஆயிரத்து 300 மூட்டைகளில் 2 லட்சத்து 15 ஆயிரம் கிலோ எடை கொண்ட கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்து இருந்தனர். இதுவே இந்த சங்கத்திற்கு வந்த அதிகப்படியான வரத்து ஆகும்.இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோவுக்கு 101 ரூபாய் முதல் 107 ரூபாய் 55 காசு வரை ஏலம் போனது. 2–ம் தரம் கொப்பரை தேங்காய் கிலோவுக்கு 75 ரூபாய் 15 காசு முதல் 100 ரூபாய் 30 காசு வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.2 கோடியே 15 லட்சம் ரூபாய்க்கு விற்பனை ஆனது. கடந்த வாரத்தை விட கொப்பரை தேங்காயின் விலை 50 காசு கூடுதலாக விற்பனையானது.

தேங்காய் விற்பனை ;பெருந்துறை வாரச்சந்தையில் தேங்காய் விற்பனை நடைபெற்றது. இதற்கு விவசாயிகள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் தேங்காய்களை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.இதில் முதல் தரம் தேங்காய் ஒன்று 13 ரூபாய் முதல் 14 ரூபாய் வரை விற்பனை ஆனது. 2–ம் தரம் தேங்காய் 11 ரூபாய் முதல் 12 ரூபாய் வரையும், 3–ம் தரம் தேங்காய் 9 ரூபாய் முதல் 10 ரூபாய் வரையும் விற்பனை ஆனது. இந்த விலை கடந்த வாரத்தை விட தேங்காய் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கூடுதல் ஆகும். மொத்தம் ரூ.18 லட்சத்துக்கு தேங்காய் விற்பனை செய்யப்பட்டது.

**உற்பத்தி குறைவால் தேங்காய் பருப்பு விலை உயர்வு தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி**



உற்பத்தி குறைவால் தேங்காய் பருப்பு விலை உயர்ந்துள்ளது. இதனால் தென்னை பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விலை உயர்வு; கரூர் மாவட்டம், குளத்துப் பாளையம், வேட்டமங்கலம், குந்தானிப்பாளையம், ஓரம்புப்பாளையம், ஓலப் பாளையம், நல்லிக்கோவில், கவுண்டன்புதூர், திருக்காடு துறை, கொங்குநகர், வடிவேல் நகர், புகழூர், தோட்டக்குறிச்சி, கடம்பங்குறிச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக் கணக்கான ஏக்கரில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. இந்த பகுதிகளில் விளையும் தேங்காய்களை விவசாயிகள் கூலி ஆட்கள் மூலம் பறித்து தேங்காயில் உள்ள பருப்புகளை நன்கு உலர வைக்கின்றனர். பின்னர் உள்ளூர் பகுதிகளில் வரும் வியாபாரிகளிடம் கிலோ கணக்கில் விற்பனை செய்கின்றனர். பல விவசாயிகள் தங்கள் தென்னை தோப்புகளில் உள்ள தென்னை மரங்களை தேங்காய் மண்டி வைத்துள்ளவர் களுக்கு வருடகுத்தகைக்கு விட்டு விடுகின்றனர். இவர்கள் தேங்காய் முதிர்ந்த வுடன் கூலித் தொழிலாளர்கள் மூலம் பறித்து கொண்டு வந்து தேங்காய் மண்டியில் மலைபோல் பல லட்சம் தேங்காய்களை குவித்து வைக்கின்றனர். தேங்காய் விலை உயரும் போது குவிக்கப் பட்ட தேங்காய்களை கூலித் தொழிலாளர்கள் மூலம் உறித்து அவைகளை சாக்குகளில் போட்டு

மூட்டைகளாக தைத்து பல்வேறு வெளி மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கின்றனர். சில வியாபாரி கள் தேங்காய் பருப்புகளை உலர்த்தி நொய்யல் அருகே உள்ள சாலைப்புதூரில் செயல் பட்டு வரும் வேளாண்மை விற்பனை மையத்திற்கு கொண்டு சென்று அங்கு விற்பனை செய்கின்றனர். வாங்கிச் செல்வதற்கு பல்வேறு மாவட்டங்களில் உள்ள பிரபல எண்ணெய் நிறுவனங்களில் இருந்து ஏஜெண்டுகளும், வியாபாரிகளும் வந்திருந்து தங்களுக்கு கட்டுப்படியாகும் விலைக்கு வாங்கிச் செல்கின்றனர். விவசாயிகள் மகிழ்ச்சி ; கடந்த வாரங்களில் 1000 கிலோ கொண்ட (கொப்பரை தேங்காய்) தேங்காய் பருப்பு ரூ.87,000–க்கு விற்பனையானது. இந்த வாரம் 1000 கிலோ கொண்ட தேங்காய் பருப்பு ரூ.95,000 முதல் தரமான தேங்காய் பருப்பு ரூ.1 லட்சம் வரை விற்பனையானது. கடந்த வாரங்களில் ஒரு தேங்காய் ரூ.12–க்கு விற்பனை ஆனது. இந்த வாரத்தில் ஒரு தேங்காய் ரூ.17 வரை விற்பனையானது. ஒரு இளநீர் அதிகபட்சம் ரூ.25 வரை விற்பனையாகிறது. மழையின்மை காரணமாகவும், கடும் வெயில் காரணமாகவும், தேங்காய் உற்பத்தி குறைந்தது. இதனால் தேங்காய் பருப்பு மற்றும் தேங்காய் விலை உயர்ந்துள்ளது.இதன் காரணமாக தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## திருச்செங்கோட்டில் வரத்து அதிகரிப்பு: 3,500 மூட்டை மஞ்சள் ரூ.1½ கோடிக்கு ஏலம் விவசாயிகள் மகிழ்ச்சி



**திருச்செங்கோட்டில்**, 3,500 மூட்டை மஞ்சள் ரூ.1½ கோடிக்கு ஏலம் போனது. வரத்து அதிகரித்து ஏலமும் அதிக தொகைக்கு போனதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். மஞ்சள் ஏலம் ; நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு கூட்டுறவு சங்கத்தில் சனிக்கிழமை தோறும் மஞ்சள் ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் இந்த வாரமும் மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகை யூர், கள்ளக்குறிச்சி, பொம்முடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்தி வேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி உள் ளிட்ட பல்வேறு

இடங்களில் இருந்து ஏராளமான விவசாயி கள் 3,500 மூட்டை மஞ்சளை விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர்.இதேபோல இந்த மஞ்சள் மூட்டைகளை கொள்முதல் செய்வதற்காக ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை மற்றும் சேலம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வந் திருந்து மஞ்சளை ஏலம் எடுத்து சென் றனர்.ரூ.1½ கோடிக்கு விற்பனை ; இந்த ஏலத்தில் விரலி ரகம் குவிண்டால் குறைந்தபட்சம் ரூ.6 ஆயிரத்து 539 முதல் அதிகபட்சம் ரூ.8 ஆயிரத்து 499 வரையும், கிழங்கு ரகம் ரூ.5 ஆயிரத்து 993 முதல் ரூ.7 ஆயிரத்து 109 வரையும், பனங் காளி ரகம் குறைந்தபட்சம் ரூ.8 ஆயிரத்து 500 முதல் அதிகபட்சம் ரூ.10 ஆயிரம் வரையும் விற்பனை செய்யப் பட்டது. மொத்தம் 3,500 மூட்டை மஞ்சள் ரூ.1½ கோடிக்கு ஏலம் போனதாக கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.கடந்த வாரம் மொத்தம் 1,800 மூட்டை மஞ்சள் ஏலத்திற்கு வந்திருந்ததில், அவை கள் ரூ.90 லட்சத்துக்கு ஏலம் போனது. இந்நிலையில் இந்த வாரம் ஏலத்துக்கு மஞ்சள் மூட்டையின் வரத்தும் அதிகரித்து, விலையும் கூடுதலாக போனதால் விவ சாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவர்ந்த பட்டர் புரூட் பழங்கள் கிலோ ரூ.60-க்கு விற்பனை**



வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவர்ந்த பட்டர் புரூட் பழங்கள் குன்னூர் சிம்ஸ் பூங்கா வில் ஒரு கிலோ ரூ.60க்கு விற்பனை செய்யப் படுகிறது. அரியவகை பழ மரங்கள் ஆங்கிலேயர்கள் ஆட்சி காலத்தில் பல்வேறு நாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட மரக்கன்றுகள், மலர் வகைகள் நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலைப்பாதைகள், தேயிலை தோட்டங்கள், பூங்காக்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் அதிகளவு நடவு செய்யப்பட் டன. மேலும், ஐரோப்பிய நாடுகளை போன்ற சீதோஷ்ண நிலை நீலகிரி மாவட்டத்தில் நிலவி வருவதால் அரிய வகை பழ மரங்கள் இங்கு அதிகளவில் நடவு செய்யப்பட்டன.இந்த

மரங்கள் இன்று வரை பாதுகாக்கப்பட்டு பரா மரிக்கப்பட்டு வருகிறது. இவ் வாறு உள்ள மரங்களையும், மலர்களையும் ஊட்டி, குன் னூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு வரும் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து சென்று வரு கின்றனர்.பட்டர் புரூட் பழம் ; அரியவகை பழ வகைகளில் பட்டர் புரூட் பழமும் ஒன்றா கும். இந்த பழவகைகள் கடல் மட்டத்தில் இருந்து உயரமான மலைப்பகுதியில் மட்டுமே வளரும். தமிழகத்தில் நீலகிரி மாவட்டம் மட்டுமின்றி கொடைக்கானல், வால்பாறை போன்ற மலைப் பகுதிகளிலும் இந்த மரங்கள் அதிகளவில் உள்ளன. பச்சையாக தோன் றும் இந்த பழத்தினுள் வெண்ணெய் போன்று சுளை இருக்கும். இதன் காரணமாக இந்த பழத் திற்கு பட்டர் புரூட் என்று பெயர் வந்தது. ஆங் கிலேயர் காலத்தில் இந்த மரம் மாவட் டத்தில் அதிகளவு பயி ரிடப்பட்டது.ஆங்கிலேயர்கள் இந்த பழத் தின் வெண்ணெய் போன்ற சுளைப்பகுதியை எடுத்து ரொட்டியினுள் வைத்துஉண்டு வந்ததாக கூறப்படுகிறது. இந்த பழம் சூட்டை தணிக்கும் தன்மை கொண்டது. தற்போது சிம்ஸ் பூங்கா அருகில் உள்ள தனியார் பங்களாக்களில் உள்ள மரங்களில் இந்த பழங் கள் அதிகளவு காய்த்து உள்ளன. சிம்ஸ் பூங்காவில் இந்த பழங்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டு உள்ளன. ஒரு கிலோ ரூ.40 முதல் ரூ.60 வரை விற்பனை செய்யப்படுகிறது. தற்போது சீசன் என்பதால் இதன் வரத்து அதிகளவு உள் ளது. இந்த பழத்தை வெளி நாட்டு சுற்றுலா பயணிகள் அதிகளவில் விரும்பி வாங்கி செல்கின்றனர்.

**<u>திருவாரூர் மாவட்டத்தில் நவீன எந்திரங்கள் மூலம் வேளாண்மை பணி</u>**



**திருவாரூர்,** மாவட்டத்தில் நவீன எந்திரங்கள் மூலம் வேளாண்மை பணி நடைபெற நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேளாண்மை பொறியி யல் துறை செயற் பொறியாளர் துரைசாமி கூறினார். பயிற்சி முகாம் ; திருவாரூர் ஒன்றியம் பூசலாங்குடி கிராமத்தில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் நவீன வேளாண்மை எந்திரங்களை இயக்குவது குறித்து விவ சாயிகளுக்கு பயிற்சி வழங்கப் பட்டது. நிகழ்ச்சிக்கு செயற் பொறியாளர் துரைசாமி தலைமை தாங்கினார். இதில் மாங்குடி உழவர் சேவை கூட்டுறவு சங்க தலைவர்

மணிகண்டன், திருவாரூர் ஒன்றியக்குழு தலைவர் மலர்மணி கண்டன், திருவாரூர் உப கோட்ட உதவி செயற்பொறி யாளர் கண்ணன், திருவாரூர் வேளாண்மை உதவி இயக்குனர் பாலசுப்பிர மணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை கருவிகள்; முகாமில் டிராக்டருடன் இணைத்து பயன்படுத்தப்படும் லேசர் கருவி மூலம் நிலம் சமன்படுத்தும் முறை, கருவிகள் மூலம் நெல் விதைக்கும் முறை, வைக்கோல் கட்டும் கருவியை பயன் படுத்தும் முறை ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.முகாமில் வேளாண்மை பொறியியல் துறை செயற் பொறியாளர் துரைசாமி பேசியபோது கூறியாவது:- வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் செயல் படுத்தப்படும் திட்டங்களை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். திருவாரூர் மாவட்ட விவசாயிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அதிக அளவிலான நவீன எந்திரங்களை வெளி மாவட்டங்களில் இருந்து பெற்று, அந்த கருவிகள் மூலம் வேளாண்மை பணி நடைபெற நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறி னார். முகாமில் வேளாண்மை பொறியியல் துறை பொறியா ளர்கள் கமலதியாகராஜன், மோகன்ராஜ், கந்தசாமி, கணேசன், வீரையன், முரளீதரன், வேளாண்மை அலுவலர்கள் செந்தில், ராதா, ஆத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் சகுந்தலா, கிராம நிர்வாக அதிகாரி ராஜேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**<u>கூடலூர் அருகே செடி, கொடிகள் வளர்வதால் குறுகிய வரத்து வாய்க்கால்கள் தண்ணீர் வெளியேறுவதில் சிக்கல்</u>**



**கூடலூர்**, அருகே வரத்து கால்வாய்களில் உள்ள செடி, கொடிகள் அகற்றப் படாததால் தண்ணீர் வெளியேறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கால்வாய் பாசனம் ; தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் உள்ள நிலங்கள் முல்லைப் பெரியாறு அணை மூலம் இரு போக பாசன வசதி பெற்று வருகின்றன. இந்த பகுதிகளில் உள்ள 14 ஆயிரத்து 707 ஏக்கர் விவசாய நிலங்களில் இருபோக நெல்

சாகுபடி நடைபெற்று வருகிறது. முல்லைப்பெரியாறு அணையில் இருந்து திறக்கப் படும் தண்ணீர் கூடலூர், கம்பம், உத்தமபாளையம், வீர பாண்டி உள்ளிட்ட பகுதி கள் வழியாக வைகை அணையை சென்றடை கிறது. லோயர்கேம்ப் வைரவன் வாய்க்கால் முதல் ஆங்கூர் பாளையம் சட்ரஸ் பகுதி வரை சுமார் 5 கி.மீ. தூரம் கொண்டது. இந்த பகுதியில் நாளுக்கு நாள் முல்லைப் பெரியாறின் கரைகளில் ஆக் கிரமிப்புகள் அதிகரித்து கொண்டே போகின்றன. மனி தர்கள் ஆக்கிரமிப்பு செய்வது ஒரு புறம் இருக்க, மற்றொரு புறம் கால்வாய், வாய்க்கால்கள் இருக்கும் இடம் தெரியாமல் செடி, கொடிகள் வளர்ந்து வருகின்றன. அகற்றப்படுமா? செடி, கொடிகள் வளர்ந்து புதர் மண்டி காணப்படுவதால் தண்ணீர் பாய்ந்து வரும் பாதையின் அளவு சுருங்கி கொண்டே போகிறது. பொட்டிபாலம், சாமி வாய்க் கால், வைரவன் வாய்க்கால், தாமரைக்குளம், சட்ரஸ் உள்ளிட்ட வாய்க்கால்களில் செடி, கொடிகள், மற்றும் முட்புதர்கள் ஏராளமான அளவில் வளர்ந்து உள்ளன. இதனால் ஆற்றில் இருந்து வாய்க்கால்களுக்கு குறைந்த அளவிலேயே தண்ணீர் வருகிறது.வரத்து குறைவால் விவசாயி கள் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதில் சிக்கல் ஏற்பட் டுள்ளது. வாய்க்கால் களில் உள்ள செடி, கொடிகளை அகற்ற வேண்டும் என்பது இந்த பகுதி விவசாயிகளின் பல ஆண்டு கோரிக்கையாக உள்ளது. ஆனால் இந்த கோரிக்கை இன்றுவரை கோரிக்கை அளவிலேயே உள்ளது. எனவே முல்லைப் பெரியாறு மற்றும் வாய்க்கால் களின் கரையோரம் வளர்ந் திருக்கும் செடி, கொடிகள், புதர்களை அகற்ற பொதுப் பணித்துறை அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஆக.28ம் தேதி கடைசிநாள்**

**கால்நடை மருத்துவ முதுகலை படிப்புகளுக்கு விண்ணப்பம்**



**நெல்லை**: கால்நடை மருத்துவ முதுகலை படிப்புக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து ஆகஸ்ட் 28க்குள் விண்ணப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், 2014-15ம்கல்வி ஆண்டு முதுநிலை படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் விநியோகத்தை தொடங்கியுள்ளது. பிஎச்டி (வெட்னரி அண்டு அனிமல் சயின்ஸ்), பிஎச்டி (புட் டெக்னாலஜி), எம்இஎஸ்சி., எம்டெக், எம்எஸ்சி, எம்பில்., எம்பிஏ மற்றும் பையோ பார்மடிக், வெட்னரி லேபரட்டரி டயக்னாசிஸ், கம்பெனியன் அனிமல் பிராக்டிஸ், பிசினஸ் மேனேஜ்மென்ட் இன் அனிமல் அண்டு பிஷரிஸ் சயின்ஸ் ஆகிய உயர் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப படிவம் மற்றும் தகவல் தொகுப்பேடுகளை ஷ்ஷ்ஷ்.tணீஸீuஸ்ணீs.ணீநீ.வீஸீ என்ற பல்கலைக் கழகத்தின் இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். சேர்க்கைக்கான கல்வித்தகுதி, முதுநிலை பட்டயப் படிப்புகளின் விவரம், கட்டணம், உள்ளிட்ட மற்ற தகவல்கள் பல்கலைக்கழக இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அடுத்த மாதம் 28ம் தேதி மாலை 5.45 மணிக்குள் தலைவர், தேர்வுக்குழு (முதுநிலை பட்டப்படிப்பு) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், மாதவரம் பால்பண்ணை, சென்னை 600 051 என்ற முகவரியில் கிடைக்குமாறு அனுப்பவேண்டும் என தேர்வுக்குழு தலைவர் தெரிவித்துள்ளார்.

<u>**நுகர்வோர் அமைச்சகம் தகவல்**</u>

<u>59 **நகரங்களில் உச்சத்தில் தக்காளி விலை**: **கிலோ ரூ**.60**க்கு விற்பனை**</u>



**புதுடெல்லி**: பருவ மழை பாதிப்பு, வறட்சி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தக்காளி சாகுபடி செய்யும் நிலத்தின் பரப்பளவு குறைந்துள்ளது. இதனால், விளைச்சலும் குறைந்துள்ளதால் கடந்த சில மாதங்களாக தக்காளி விலை அதிகரித்து வருகிறது. தமிழகம் மற்றும் கர்நாடகத்தில் சாகுபடி செய்யப்படும் தக்காளி தென்னிந்தியா முழுவதும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. இமாச்சலப் பிரதேசத்தில் விளையும் தக்காளி வட மாநிலங்களுக்கு வினியோகிக்கப்படுகிறது. இந்நிலையில், தக்காளி விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளதாலும், இது அன்றாட தேவை என்பதால் சந்தைக்கு வரும் அளவை கணக்கில் கொண்டும், அன்றைய சந்தை தேவையை முடிவு செய்தும் தக்காளி விலையை மொத்த வியாபாரிகள் முடிவு செய்கின்றனர். வரத்து குறைந்து தேவை அதிகமாகும் போது தக்காளி விலை உச்சத்தை தொடுகிறது. மகசூல் அதிகமாக இருக்கும் காலங்களில் அதற்கான விலை என்பது உற்பத்தி விலையை விட குறைவாக போகும் போது அவற்றை செடிகளில் இருந்து பறிக்காமலேயே விவசாயிகள் விட்டு விடுவதும் சில நேரங்களில் தொடர் கதையாக இருக்கும். தற்போது தக்காளி விளைச்சல் பாதிப்பு உச்சத்தில் இருப்பதால் நாட்டிலுள்ள 59 நகரங்களில் ஒரு கிலோ தக்காளி சராசரியாக ரூ.60க்கு விற்கப்படுவதாக மத்திய நுகர்வோர் அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>மஞ்சள் கூடுதலாக விலை</u>**



**ஆத்தூர்**: சேலம் மாவட்டம், ஆத்தூர் புதுப்பேட்டையில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம் தோறும் சனிக்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெறும். அதன்படி, கடந்த சனிக்கிழை நடந்த ஏலத்தில் சேலம், விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இந்த மஞ்சளை ஏலம் எடுக்க வியா பாரிகள் குவிந்தனர். ஏலத்தில், 2,500 மூட்டை மஞ்சள் ரூ.1.10 கோடிக்கு விற்பனையானது. விரலி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.5,999 முதல் ரூ.8,009 வரையிலும், உருண்டை ரகம் ரூ.5,709 முதல் ரூ.6,969 வரையிலும் விற்பனையானது. கடந்த வாரத்தைவிட மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.400 முதல் ரூ.500 வரை கூடுதலாக விலை கிடைத்தது என்று சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## 70 ஆயிரம் மெட்ரிக் டன் வெங்காயம் இறக்குமதி



**நாசிக்**: வெங்காய விலையை கட்டுப்படுத்தவும், தேவையை பூர்த்தி செய்யவும் 70 ஆயிரம் மெட்ரிக் டன் வெங்காயத்தை மத்திய அரசு இறக்குமதி செய்ய உள்ளது. பாகிஸ்தான், ஈரான், எகிப்த், சீனாவில் இருந்து இறக்குமதி செய்ய டெண்டர் கோரும் பணி தொடங்கிவிட்டது. அடுத்த மாதம் மத்தியில் வெங்காயம் இறக்குமதி செய்யப்படும் என தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பு அதிகாரிகள் கூறினர்.

## நாமக்கல் முட்டை விலையில் சரிவு: கவலையில் பண்ணையாளர்கள்

**நாமக்கல்**: நாமக்கல் பகுதியில் உள்ள கோழிப்பண்ணைகளில் சுமார் 6 கோடி கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இதன் மூலம் தினமும் உற்பத்தியாகும் 3.50 கோடி முட்டையில் தமிழக அரசின் சத்துணவு திட்டத்துக்கு மட்டும் வாரம் 3.20 கோடி முட்டைகள் வழங்கப்படுகிறது. தவிர பல்வேறு மாவட்டங்களுக்கும், கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கு நாமக்கள் முட்டைகள் விற்பனை செய்யப்படுகிறது. இந்த ஆண்டு துவக்கத்தில் ஒரு முட்டையின் விலை 365 காசாக இருந்தது. இந்த மாதம் 1ம்தேதி ஒரு முட்டையின் விலை 363 காசாக இருந்தது. தற்போது 280 காசாக சரிந்துள்ளதால் பண்ணையாளர்கள்

கலக்கமடைந்துள்ளனர். இது குறித்து தமிழ்நாடு முட்டைக்கோழி உற்பத்தியாளர்கள் சம்மேளன துணைத்தலைவர் வாங்கிலி சுப்பிரமணியம் கூறியதாவது: நாமக்கல் முட்டையின் விற்பனை மையமாக கேரளா இருந்து வந்தது. கர்நாடக மாநில முட்டைகள் கேரள மாநிலத்திற்கு வருகிறது. ஐதராபாத் மண்டலத்தில் முட்டை விலை குறைவாக இருப்பதால் சென்னை வியாபாரிகள் பாதிப்பேர் அங்கு சென்றுவிடுகின்றனர். தொழில் போட்டியால் விலையை குறைக்கவேண்டி உள்ளது. தமிழகத்தில் நாமக்கல் முட்டை செல்லாத கிராமங்களை கண்டறிந்து முட்டை விற்பனை அதிகரிக்க செய்யவேண்டும். இல்லாவிட்டால் முட்டை விலை மேலும் குறையும். தற்போது 280 காசுக்கு ஒரு முட்டையை விற்பனை செய்வதால் பண்ணையாளர்களுக்கு நஷ்டம் தான். தமிழகத்தில் ஆடி விரதம், வடமாநிலங்களில் ஸ்ராவண் பண்டிகை, ரம்ஜான் நோன்பு போன்ற காரணங்களால் தற்போது முட்டை விலை குறைக்கப் பட்டுள்ளது. தமிழக விற்பனை மையங்களை கர்நாடக முட்டைகள் பிடித்துள்ளதால் நாமக்கல் பண்ணையாளர்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## பெரியவெங்காயத்தின் விலை கடுமையாக வீழ்ச்சி



**கோவை**: மகாராஷ்டிராவில் விளையும் பெரியவெங்காயத்திற்கு இந்தியா முழுவதும் கிராக்கி உள்ளதால், நாட்டில் உள்ள அனைத்து சந்தைகளிலும் மகாராஷ்டிரா பெரியவெங்காயம் சந்தைப்படுத்தப்படுகிறது. மேலும், விலையும் இங்கு தான் நிர்ணயிக்கப்படுகிறது. கடந்த 3 மாதங்களாக மகாராஷ்டிராவில் விளைச்சல் குறைந்ததால் நாடு முழுவதும் பெரியவெங்காயத்திற்கு தேவை அதிகரித்து விலையும் உச்சத்தில் இருந்தது. ஒரு கிலோ பெரியவெங்காயம் ரூ.38 முதல் ரூ.42 வரை விற்பனை செய்யப்பட்டன. இந்நிலையில் கடந்த வாரம் முதல் மகாராஷ்டிராவில் மழை பெய்து வருகிறது. இதனால், தற்போது நடப்பட்டுள்ள வெங்காயத்தை அறுவடை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். இந்நிலையில் கடந்த வாரம் இந்தியா முழுவதும்

பெரியவெங்காயம் தட்டுப்பாட்டை நீக்கி விலையை கட்டுக்குள் கொண்டு வர மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகவும், பாகிஸ்தானில் இருந்து 1 லட்சம் டன் பெரியவெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாகவும் கடந்த வாரம் தகவல்கள் வெளியானது. இதன் தாக்கமாக பெரியவெங்காயம் விலை சரிவடைந்து கிலோ ரூ.20க்கு விற்கப்படுகிறது. இதுகுறித்து டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் ராஜேந்திரன் கூறுகையில், கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள எம்.ஜி.ஆர் மார்க்கெட்டுக்கு வரத்து அதிகம் உள்ள நாட்களில் 400 டன்னும், வரத்து குறைவான நாட்களில் 200 டன்னும் பெரியவெங்காயம் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. தற்போது இந்தியா முழுவதும் காய்கறி மற்றும் வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சராசரியாக ரூ.40க்கு குறைவாக எந்த காய்களும் வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு பருவமழை பெய்யாததே காரணம். மேலும், காய்கறி விலை உயர்வை கண்டித்து வடமாநிலங்களில் பல இடங்களில் போராட்டங் கள் நடைபெற்று வருகின்றன. பெரியவெங்காயத்தின் விலையை குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் எதிரொலியாக கடந்த வாரம் பாகிஸ்தானில் இருந்து 1 லட்சம் டன் பெரியவெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின. இதனால், பெரியவெங்காயத்தின் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது என்றார்.

## விவசாயிகளுக்கு விதை மானியமும் வறட்சி நிவாரணமும் வழங்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை

**காஞ்சிபுரம்**, : காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடந்தது. கலெக்டர் பாஸ்கரன் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் சம்பத்குமார் முன்னிலை வகித்தார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் பொன்சந்திரன் வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குனர் சீத்தாராமன், கால்நடை இணை இயக்குனர் சுகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை வைத்து பேசியதாவது: காஞ்சிபுரம் நகராட்சியில் பிறப்பு, இறப்பு சான்று வழங்குவதற்கு 300 ரூபாய் லஞ்சம் கேட்கிறார்கள். விவசாயத்தை பாதிக்கும் வகையில் பெருகி வரும் இறால் பண்ணையை தடுக்கவேண்டும். உத்திரமேரூர் விவசாயிகளிடம் இருந்து கரும்பு சரிவர எடுப்பதில்லை. அவசியமின்றி பனை மரங்களை வெட்டும் ஊராட்சி தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய கடனை தள்ளுபடி செய்யவேண்டும். சோலார் மின்சாரம் மூலம் விவசாயம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். பக்கத்து மாவட்டமான திருவண்ணாமலை மாவட்டத்தில் விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் வண்டல் மண் எடுக்க

அனுமதி வழங்கப் பட்டுள்ளது. ஆனால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அனுமதியில்லை. விவசாயி களுக்கு விதை மானியமும், வறட்சி நிவாரணம் வழங்கவேண்டும்.இவ்வாறு விவசாயிகள் கூறினர். விவசாயிகளின் கேள்விகளுக்கு பதிலளித்து கலெக்டர் கூறுகையில், லஞ்சம் வாங்குவோரை லஞ்ச ஒழிப்புத்துறையில் பிடித்து கொடுங்கள். இது ஊராட்சி தலைவர்களுக்கும் பொருந்தும். விவசாயிகளின் கோரிக்கை மனுக்களுக்கு உடனே பதிலளித்து தீர்வுகாணுங்கள் என அதிகாரிகளுக்கு அறிவுரை கூறினார். கூட்டத்தில் பெரும்பாலான விவசாயிகளுக்கு பேச வாய்ப்பளிக்கவில்லை. கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு காணாமல் பதில் அனுப்பிவிட்டோம் என கூறி கூட்டத்தை முடித்துவிட்டனர். முன்னதாக, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் நேரு பேசும்போது, ''விதை நெல் ஒரு இடத்தில் அதிகமாவும், குறைவாகவும் எடுக்கப்படுகிறது. இதில் பல்வேறு முறைகேடு நடக்கிறது. இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்றார். அப்போது, உதவி வேளாண்மை இயக்குனர் சீத்தாராமன், நேருவை பார்த்து வெட்டியாக பேசாதீர்கள் என்றார். இதனால் கோபமடைந்த விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து நான் பேசியது தவறு, விவசாயிகளிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.